Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 12 ஞாயிற்றுக்கிழமை (26.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 238

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2486)

















# 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து கோத்தாபய கருத்துக் கூற முடியாது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்தல் அல்லது அதில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கு எந்தவித உரிமையும் கிடையாதென தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவினால் முன் வைக்கப்படவுள்ள தனிநபர் பிரேரணை செல்லுபடியற்றதாகும். எனவே, அரசு மேற்படி பிரேரனைக்கு அங்கீகாரம் வழங்காது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கருத்துக்களை தெரிவிப்பதற்கு பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கு அதிகாரமோ உரிமையோ கிடையாது.

தேசிய அரசியல் செயற்பாடுகள் குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்கும். இதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தீக்குளித்த பிக்கு மரணம்

(கொழும்பு)

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் நேற்று முன்தினம் மிருக வதையினை கண்டித்து தனக்குத் தானே தீமூட்டிக் கொண்ட பௌத்த பிக்கு, சிகிச்சை பலனின்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளதாக கொழும்பு வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை பௌத்த பிக்குவின் தற்கொலை முயற்சி குறித்து தமக்கு எதுவும் தெரியாது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து

19 ஆம் பக்கம் பார்க்க

# திருமலையில் அமெரிக்கன் கோணர்; விளக்கம் கோரவுள்ளது அரசாங்கம்

(கொழும்பு)

அமெரிக்க தகவல் நிலையத்தை அமைப்பது தொடர்பாக, திருகோணமலை நகரசபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் விளக்கம் கோர அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

திருகோணமலையில் பொதுத் தகவல் மற்றும் செயற்பாட்டு நிலையத்தை (அமெரிக்கன் கோணர்) அமைப்பதற்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், திருகோணமலை நகரசபையுடன் கடந்த 22 ஆம் திகதி உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டது.

இந்த உடன்பாடு குறித்து வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்படாதது அரசாங்கத்துக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையிலேயே கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் விளக்கம் கோர வெளிவிவகார அமைச்சு முடிவு செய்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக அமுனுகம,

உள்நாட்டில் எத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதானாலும் சரி, உள்ளூராட்சி சபைகளுடன் உடன்பாடுகளை செய்து கொள்வதானாலும் சரி, அதுகுறித்து வெளிநாட்டுத்

19 ஆம் பக்கம் பார்க்க

# பிரபல பின்னணிப் பாடகர் சௌந்தரராஜன் காலமானார்



(சென்னை)

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன் சென்னையில் காலமானார். இதயக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் பின்னர் வீடு திரும்பியிருந்தார்.

எனினும் நேற்று மாலை அவர் தனது வீட்டில் காலமானார். அவருக்கு வயது 91.

தென்னிந்திய திரையுலகில் அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக பின்னணிப் பாடல்களைப் பாடி வந்த இவர், பட்டினத்தார் உட்பட சில திரைப்படங்களிலும் நடித்திருந்தார்.

1923 ஆம் ஆண்டு மதுரையில் சௌராஸ்டிர குடும்பத்தில் பிறந்த இவரது தந்தையார் பெயர் மீனாட்சி ஐயங்கார். 1950 ஆம் ஆண்டும் கிருஷ்ண

19 ஆம் பக்கம் பார்க்க

# மன்னார் ஆயருக்கு எதிராக பொதுபலசேனா மாநாடு

## செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு எதிராக பொதுபலசேனா அமைப்பு மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. விரைவில் இந்த மாநாடு நடத்தப்படும் என பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ தலையீடுகளிலிருந்து மன்னார் மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மன்னார் பேராயரின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கப்படும் என

19 ஆம் பக்கம் பார்க்க

# புலம்பெயர்ந்த தமிழர்களின் கைப்பாவையாக மன்னிப்புச்சபை

## இராணுவம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்களின் கைப்பாவையாக செயற்படும் சர்வதேச மன்னிப்புச்சபை இராணுவத்தினர் போர்க்குற்றச்செயலகளில் ஈடுபட்டதாக அபாண்டமான பழியைச் சுமத்தி சர்வதேச ரீதியில் தமக்கு நற்பெயரை இழந்து வருவதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் போர்க்குற்றவாளிகள் சுதந்திரமாக உலா வருகின்றனர் என சர்வதேச மன்னிப்புச் சபை முன்வைத்துள்ள குற்றச்சாட்டை நாம் அடியோடு நிராகரிக்கிறோம்.

இராணுவத்தால் திட்டமிட்ட முறையில் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்படவில்லை. இது போன்ற குற்றச்சாட்டுகளை முன் வைக்கும் மன்னிப்புச் சபை போர்க்குற்றங்கள் எப்போது, எங்கு, எந்த நேரத்தில் இடம்பெற்றன என்று தம்மிடமிருக்கும் ஆதாரங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

போர்க்குற்றம் என்பது யுத்த காலத்தில் தான்தோன்றித்தன்மாகச் செய்யப்படும் குற்றச் செயல்களாகும். ஆனால, போரின்போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவத்தினர் அவ்வாறான குற்றச் செயலில் ஈடுபடவில்லை.

தீவிரவாதிகளிடமிருந்து 2 இலட்சத்து 95 ஆயிரம் மக்களைப் பாதுகாப்பாக மீட்டெடுத்தோம். இவர்களை நாம் மீட்டெடுத்த போதும் தீவிரவாதிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா. மனித உரிமை கூட்டத்திற்கு முக்கிய அதிகாரிகள் செல்லார்


(கொழும்பு)

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 23 ஆவது கூட்டத் தொடர் நாளைய தினம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை சார்பாக அமைச்சர்களோ அதிகாரிகளோ கலந்துகொள்ள மாட்டார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை ஆரம்பமாகி எதிர் வரும் யூன் மாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த 23 ஆவது கூட்டத்தொடரின் அமர்வுகளின் போது நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் பல்வேறு நாடுகள் தொடர்பில்

19 ஆம் பக்கம் பார்க்க

இன்று ENGLISH
THE EASY WAY
Modern 5 Way Approach to English Language Learning
இலவச கருத்தரங்கு
By: S.Muththulingam
காலை 10 மணி
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 222 0011



நேற்றைய தினம் யாழ்ப்பாண கம்பன் கழக இறுதி நாள் நிகழ்வில் இடம்பெற்ற கவியரங்கம், வழக்காடு மன்றம் மற்றும் கலந்து கொண்டவர்களை காணலாம். (10)

# புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் கற்றல் உபகரணம் வழங்கல்

(கோப்பாய்)

கோப்பாய் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை ஒட்டிய கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்றைய தினம் யாழ்.புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகவும், மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சிறப்பு விருந்தினராகவும், மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆ.இரகுநாதன், சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வலி.கிழக்கு பிரதேச செயலக சமுர்த்திக் குடும்பம் அழைப்பு விடுத்துள்ளது.

## மோட்டார்சைக்கிள் மோதி வயோதிபர் படுகாயம்

யாழ்ப்பாணம் பஸ்தியன் சந்தியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவரது துவிச்சக்கரவண்டியும் சேதமடைந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஈச்சமோட்டையைச் சேர்ந்த பா.தேவராசன், (வயது - 60) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவராவார்.

பஸ்தியன் சந்தியில் இருந்து அச்சகக்கூட வீதிக்கு இவர் துவிச்சக்கர வண்டியில் திரும்பிச் செல்ல முயன்ற வேளை அச்சகக்கூட வீதியால் வந்துகொணடிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இவரது துவிச்சக்கர வண்டியின் மீது மோதவே அவர் வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். உடனடியாக இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

## டிப்பரால் மோதுண்ட உறவினர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மகா வித்தியாலத்திற்கு முன்பாக பிரதான வீதியில் நேற்று அதிகாலை டிப்பர் வாகனம் ஒன்றினால் மோதுண்டு இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ந.சாந்தகுமாரி (வயது - 53) அவரது பெறா மகனான துசிகரன் (வயது - 28) ஆகிய இருவருமே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது நெருங்கிய உறவினர் ஒருவரது மரண வீட்டிற்காக இருவரும் அதிகாலை குறித்த வீதியால் நடந்து வந்துகெண்டிருந்த போது வேகமாக வந்த டிப்பர் வாகனம் இவர்களை மோதிவிட்டுத் தப்பிச்சென்றதாக தெரியவருகிறது. (பா)

## வைகாசிப் பொங்கல்

(பொலிகண்டி)

பொலிகண்டி மருதாம்புலம் சிறி பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா நாளைய தினம் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு வழுந்து எடுக்கும் வைபவம் ஆரம்பமாகி தொடர்ந்து பொங்கல் இடம்பெறும். மாலை 4 மணியளவில் விசேட பொங்கல் நடைபெறுமெனவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆலய மணவாளக் கோல நிகழ்வும் கும்பாபிஷேக தினமும் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாற்குடம், பாற்செம்பு, காவடி, கரகமெடுக்கும் அடியார்கள் முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு ஆலய உபதலைவர் எஸ்.பாஸ்கரசோதி தெரிவித்துள்ளார். (116)


## வாகனம் தேவை

யாழ்- கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தில் கடமையாற்றும் திட்ட ஆலோசகரின் அலுவலக பாவனைக்கு குளிரூட்டி வசதியுடன் கூடிய மோட்டார் கார் ஒன்று வாடகைக்குத் தேவைப்படுகிறது.

27.05.2013 முற்பகல் 10.00 மணி தொடக்கம் 30.05.2013 பிற்பகல் 2 மணி வரை கேள்விப்பத்திரங்களை கீழ் வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்,
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை,
கண்டி வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 222 0256, 075 851 7374.

(R/183)


## வியாழ மாற்றம்; ஓம வழிபாடு

பொலிகண்டி மருதாம்புலம் சிறி காளி அம்பாள் ஆலயத்தில் வியாழமாற்றத்தை முன்னிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை வியாழபகவானுக்கு விசேட ஓம வழிபாடு இடம்பெறவுள்ளது.

எனவே மேடம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய இராசிகளின் தோஷ நட்சத்திரங்களை உடையவர்கள் இந்த விசேட ஓம வழிபாட்டில் பங்குகொள்ள முடியும்.

இவ்வாறு இந்த வழிபாட்டில் பங்கு பெற்றுபவர்கள் எதிர வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஆலய பரிபாலன சபையில் ரூபா 250 ஐச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக கொள்ளுமாறு ஆலயபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (116)

## கருத்தரங்கு

(வேலணை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.பிரிவின் வேலணை பிரதேச செயலர் பிரிவு சங்கத்தின் கருத்தரங்குக் கூட்டம் இன்றைய தினம் காலை 9 மணியளவில் சங்கத்தின் தலைவர் ச.விநாயகமூர்த்தி தலைமையில் புங்குடுதீவில் உள்ளசர் வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (05)

## அறிவியல் ஆன்மீக சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அறிவியல் நல்மணப்பாங்கு, சிந்தனை வட்டத்தினரினது மாதாந்த பூரணை தின அறிவியல் ஆண்மீக சங்கம நிகழ்வொன்று இன்றைய தினம் மாலை 4 மணியளவில் யாழ். குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'தியானப் பயிற்சியும் ஆன்மீக சிந்தனைகளும்', 'மானிடம்' என்ற தலைப்புக்களில் கருத்துரையாடல்களும், கோப்பாய் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசினது சிறப்புரை ஒன்றும் இடம்பெறவுள்ளது. (05)


**Palmyrah Industrial Complex Building Construction of Balance work for Palmyrah Development Board at Karainagar - Jaffna**

1. The Chairman of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for Palmyrah Industrial Complex Building Construction of balance work for Palmyrah Development Board at Karainagar - Jaffna as described below and estimated to cost of Rs. 3.10 million.

   The construction period is 84 Days.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M7/C8 or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the Department of Building (Central), Beach Road, Jaffna or The Chairman, Palmyrah Development Board (Jaffna), and inspect the bidding documents at the same address on any working day from 8:30 hrs to 16:15 hrs. Contact numbers are Phone: 021 2222034 Facsimile: 021 2224154 & Building Department No: 021 2222781.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 29th May 2013 until 0711, June 2013 from 8:30 hrs to 16:15 hrs upon payment of non refundable fee of Rupees one thousand (Rs.1,000/=)
6. Bids shall be delivered or sent by registered post to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna before 10:00 hrs on 11th June 2013. Bids will be opened soon after closing at the Office of The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders' representatives who choose the attend.
7. All bids shall be accompanied by a Bid Security obtain from a reputed Bank in Sri Lanka

- In the form included in the Section 09 of the Bidding document
- In favour The Chairman, Palmyrah Development Board
- For an amount of Rupees Forty six thousand five hundred (Rs. 46,500.00).
- Valid up to 23rd September 2013.

**Pasupathy Seevarathnam,**
**Chairman,**
**Palmyrah Development Board**

(C/2790)



யாழ்ப்பாணக் கம்பன் விழாவின் ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றபோது தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த புலவர் இரா.மாது உரையாற்றுவதையும் மதத் தலைவர்கள் அமர்ந்திருப்பதையும் நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (10)

# உயர்தரத்தில் ஊடகக் கற்கை நெறி; பல்கலைக்கழக அனுமதிக்கு வாய்ப்பாகிறது

## வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா

(யாழ்.நிருபர்)

க.பொ.த உயர்தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பாடங்களைத் தெரிவு செய்வதன் மூலம் இலகுவாகப் பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல முடியும். தொடர்பாடலும், ஊடகக் கற்கையும் என்ற பாடம் பல்கலைக்கழக வாய்ப்பை இலகுபடுத்துகிறது. இப்பாடத்தினைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் முன்வரவேண்டும். என வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் வடமாகாணத்தின் ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான தொடர்பாடலும், ஊடகக் கற்கையையும் சான்றிதழ்க் கற்கை நெறியையும் ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடநெறி, வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகின் சர்வதேச ரீதியில் ஏற்படும் மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் ஏற்ற ஒரு சிறந்தபாடநெறியாகும். இப்பாடம் பற்றி மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

புதிய பாடங்களை அறிமுகப்படுத்துவதற்கு எம்மிடம்பொருத்தமான ஆசிரியவளம் இல்லை. ஆரம்பத்தில் கடல்வளம் என்ற பாடத்தை கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பித்தோம், கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்கள் சுயமாகவே கற்று A,B தரப் பெறுபேறுகளைப் பெற்றார்கள் இதனைத் தொடர்ந்து ஏனைய பாடசாலைகளிலும் இப்பாடத்தை மாணவர் விரும்பிக்கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.



ஊடகக்கற்கை பல்கலைக்கழகங்களில் வளர்ந்துவரும் துறை பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கும் வாய்ப்பான பாடமாகவுள்ளது. எனவே இத்துறையில் எமது மாணவர்களை வழிப்படுத்தவேண்டும்..

பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள கலைப்பட்டதாரிகள் இப்பாடத்தைக் கற்பிக்க முன்வரவேண்டும் அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்க நாம். தயாராக இருக்கிறோம். எனக் குறிப்பிட்டார்.

# தற்போது வீசும் கடும் காற்று; பயிர்களும், மரங்களும் நாசம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பிரதேசத்தின் பல பகுதிகளில் காலநிலை மாற்றத்தால் வீசிக்கொண்டிருக்கும் காற்றால் மக்கள் பெரும் பாதிப்படைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதாவது பலமாக காற்று வீசுவதால் தமது பயன்தரு மரங்களில் காணப்படும் பிஞ்சுகள், பூக்கள் என்பன உதிர்ந்து விழுவதாகவும் இதனால் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வாழை மரங்களும் குலைகளுடன் முறிந்து விழுவதாகவும் தெரிவிக்கின்றனர். அத்துடன் கிணறுகளுக்குள்ளும் மரங்களின் இலை குழைகள் காற்றால் கொட்டப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அத்துடன் விவசாயிகளால் பயிரிடப்பட்ட பயிற்றை, தக்காளி, பாவல் போன்ற கொடிப் பயிர்வகைகளும் சாய்ந்தும் முறிந்தும் பூக்கள் பிஞ்சுகள் உதிர்ந்து விழுவதாகவும் விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலை நீண்ட நாட்களுக்கு தொடர்ந்தால் தாம்பெரும் இக்கட்டான நிலையை எதிர்நோக்கவேண்டிவரும் என விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (85)

# பொங்கல் விழாவும் ஓம வழிபாடும்

(கரணவாய்)

பொலிகண்டி மருதாம் புலம்ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணியளவில் பூசைகள் யாவும் நிறைவுபெறும்.

மேலும் வியாழ மாற்றத்தை முன்னிட்டு எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் வியாழ பகவானுக்கு விசேட ஹோமவழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

தோஷ நட்சத்திரக்காரர்கள் இதில் கலந்து கொண்டு வியாழ பகவானின் அருளைப் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18,116)

# மல்லாவி சுங்கன் மோட்டை வீதி புனரமைக்கப்படுவது எப்போது?




(மல்லாவி)

மல்லாவி அனிச்சயன்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 1ஆம் ஒழுங்கை சுங்கன் மோட்டை வீதி இதுவரை திருத்தப்படாத நிலையில் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது.

குண்டும் குழியுமாக சேதமடைந்துள்ள இவ்வீதியால் நாளாந்தப்போக்குவரத்தை மேற்கொள்வோர் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிப் பகுதியில் 45 குடும்பங்கள் மீள்குடியேறி வசித்து வரும் நிலையில் இவர்கள் இவ்வீதியூடாக தினமும் பயணம் செய்து வருகின்றனர். இந்நிலையில் இவ்வீதி புனரமைக்கப்படாமையால் இவ்வீதியூடாக செல்லும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் தொழிலாளர்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்கின்றனர்.

எனவே போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)



வல்வெட்டி வேவில் பிள்ளையார் ஆலய உற்சவ தினத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை ஊரணி இந்து சமுத்திரத்தில் சுவாமி தீர்த்தமாடுவதைக் காணலாம்.
பொலிகையூர் கே.கே. விசிந்தன் (116)

# கலை இலக்கிய வட்டத்தின் உயிர்ப்பு விழாப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க கலை இலக்கியவட்டத்தினால் உயிர்ப்பு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப்பெறுவோர் விபரம் வருமாறு:

**கவிதைப் போட்டி**

ஏ.ஜொஸ்வின் (யாழ்.மரியன்னை பேராலயம் யாழ்ப்பாணம்), ஆ.லெனின் (மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), ஆ. மேகலா (கிளி. தருமபுரம் மகாவித்தியாலயம்)

**கட்டுரைப் போட்டி**

ச.மேரி ஜனுசயா (முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு), அ.ஜொகான் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்), எ.அனுசியா (குழந்தை இயேசு ஆலயம் பொலிகண்டி, சக்கோட்டை)

**சித்திரப் போட்டி**

ஜெ.கொலிஸ்ரன் (யாழ்.திருமறைக் கலாமன்றம்),எஸ்.சிந்துஜன் (யாழ். திருமறைக்கலாமன்றம்), ஏ.கவின்யா (கிளி.புனித பற்றிமா றோ.க. தமிழ் மகாவித்தியாலயம், உருத்திரபுரம்), றே.யோன்பற்றிக் (புனித ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு)

கடுமையாக முயற்சி செய், வெற்றி உன்னைத் தேடி வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. - வெஸ்மல்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வைரங்களை ஒளிமங்கச் செய்கிறோம்!

"ஒரு குழந்தை நல்லபடியாக வளர்ந்து முன்னேற வேண்டும் என்றால் மூன்று பேர் முக்கியம். அம்மா, அப்பா, பள்ளிக்கூட ஆசிரியர். அந்தக் குழந்தையின் பிற்கால வாழ்வுக்கு வேண்டிய நல்ல குணங்களை இவர்களால் தான் ஊட்ட முடியும். மூவரும் சேர்ந்து பதினைந்து வயதுக்குள் ஒரு குணமான பிள்ளையாக மாற்றாவிட்டால் பிறகு கடவுளோ, பிசாசோ, எந்த அரசாங்கச் சட்டமோ அவர்களை மாற்ற முடியாது" என்பார்கள்.

இதற்கு, பள்ளிக்கூடங்களில் வெறும் பாடப்புத்தகங்களுக்கு மேலதிகமாக வாழ்வுக்கான கல்வி வழங்குவதற்கும் பாட நேரங்கள் ஒதுக்கியாக வேண்டும். சமூகத்துடனான உறவும் அக்கறையும் ஊட்டக்கூடிய வகுப்புகள் ஏற்படுத்தப்படாவிட்டால், இன்றைய தொழினுட்ப வளர்ச்சியும் ஆற்றலும் சிறுவர்களை முரட்டுத்தனமான திசைகளிலேயே எடுத்துச் சென்றுவிடும்.

மாணவர்களை பரீட்சைகளும், தரப்படும் மதிப்பெண்களும், பாஸ் – பெயில் என்னும் தரமதிப்பீடுகளும் படுத்தும் பாட்டை எல்லோரும்தான் சொல்லிவருகிறார்கள். என்றாலும் அவற்றிலிருந்து மீட்டு குழந்தைகளுக்கு அந்த சிறு சுதந்திரத்தைக் கூடப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. கல்வியில் பின்தங்கிய குழந்தையை விசேட கவனிப்புக்குள்ளாக்க வேண்டும் என்பதையும் ஒப்புக்கொண்டாலும், நடைமுறையில் யாராலும் அதற்கு மெனக்கெட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

பரீட்சை மதிப்பெண்களுக்காக மாணவர்களும் பெற்றோர்களும் படும் சிரமங்களும் முயற்சிகளும் அளவற்றவை. குழந்தைகளின் தனித்தன்மைகளைக் கணக்கிலெடுக்காமல், இயந்திரகதியில் ஒற்றைத்தன்மையுடன் புள்ளிகள் போட்டு, கெட்டிக்காரன்–மக்கு என்று பிரிப்பதே நடந்துவருகிறது. இந்த மதிப்புப் புள்ளிகள் குழந்தைகளை என்ன செய்யும்? குறைந்தபட்சம் குழந்தைகளின் அறிதல் திறனைப் பெற்றோருக்குப் புரியவைக்கக் கூட தர மதிப்பெண்கள் உதவுவதில்லை.

ஒரு பாடத்தில் பெயில் என்ற தகவல், குழந்தைகள் வளர்ப்பு விஷயத்தில் சிறிதும் உதவாது. ஏனெனில் குழந்தையின் உடல் நலத்தைச் சோதிக்கும் மருத்துவர் குழந்தைக்குக் "காய்ச்சல்" என்று துண்டில் எழுதிக் கொடுத்துவிட்டால் போதுமா? அது போலத் தான் தர மதிப்பீடும். ஆசிரியரும் பெற்றோரும் கலந்து ஆலோசிக்க வேண்டும். வற்புறுத்தல்கள் இல்லாமல் குழந்தையின் இயல்பான கற்றல் திறனைத் தூண்டுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

நமது கல்விமுறையால், "வகுப்பறைகளில் கூழாங்கற்கள் பட்டை தீட்டப்படுகின்றன; வைரங்கள் ஒளிமங்கிப் போகின்றன" என்கிறார் கல்வியாளர் ஜோன் லூயி. கல்விமுறை ஒவ்வொரு குழந்தைக்கும் தன்னுடைய சக்தியின் மீது நம்பிக்கையூட்டுவதாக அமைய வேண்டும். ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் செல்ல குழந்தைகள் துள்ளியோட வேண்டும்; ஒவ்வொருமுறை ஆசிரியர்களைச் சந்திக்கும்போதும் குழந்தைகள் மகிழ்ச்சியடைய வேண்டும்; குழந்தைகள் தம் மனத்திலுள்ள விஷயங்களை ஆசிரியருடன் பகிர்ந்துகொள்ளுமளவு வகுப்பறைச் சூழல் நிலவ வேண்டும்.

சோவியத் கல்வியியல் நிபுணர் அமன்ஷ்வீலி குழந்தைகள் பற்றிக் கூறும் பின்வரும் தகவலை நாம் கவனத்திலெடுக்க வேண்டும்.

"குழந்தைகளை ஆசிரியர்கள் முழுமனதோடு நேசிக்க வேண்டும். அவர்களை எப்படி நேசிக்க வேண்டும், அந்த நேசத்தை எப்படி வெளிப்படுத்த வேண்டுமென அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு பாட வேளையையும் குழந்தைகளுக்குப் பரிசாக, ஆசிரியர் யோசித்துச் செயற்பட வேண்டும். குழந்தை ஆசிரியருடன் கலந்து பழகும் போது, ஒவ்வொருமுறையும் அது மகிழ்ச்சியையும் எதிர்கால நம்பிக்கையையும் அவன்/அவள் மனதில் ஊட்டுவதாக அமைய வேண்டும்".

- ஆசிரியர்

# வடக்கிற்கு அதிக அதிகாரங்களா?

# கிழக்கிலிருந்து கிளம்பும் எதிர்ப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் வடக்கு முஸ்லிம்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும் என்ற அச்சம் இருக்கின்றது என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் முஸ்லிம்கள் உளப்பூர்வமாக அக்கறை கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரம் அவ்வாறு வழங்கப்படுகின்ற எந்தவொரு தீர்வும் இன்னும் ஒரு சிறுபான்மையான முஸ்லிம்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக ஆக்கிவிடக் கூடாது. என்பதை சிந்திக்கத் தெரிந்த சகலரும் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவது தொடர்பில் அரசியல் அரங்கில் எழுந்துள்ள புதிய சர்ச்சை தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்

இது குறித்து அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு தொடர்பாக விபரிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 2 தசாப்தங்கள் கடந்த நிலையிலும் இன்னும் அவ் அதிகாரங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

அதேநேரம் வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறுவதற்கான உத்தியோகபூர்வமற்ற அறிவிப்புக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டுமா என்ற தலைப்பு சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஒருபுறம் தீவிரவாத போக்குடைய பேரினவாத அமைப்புக்கள் அவை நீக்கப்பட வேண்டும் என்றும், சிறுபான்மைகளுக்கு மத்தியில் இருந்து அவை நீக்கப்படக்கூடாது என்ற கருத்துக்களும் பலமாக மோதிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் துரதிஸ்ட வசமாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதனால் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற சாதக பாதகங்கள் தொடர்பாக எவரும் வாய் திறப்பதாக தெரியவில்லை.

முஸ்லிம்களின் பிரதான கட்சி என்று தங்களை அழைப்பவர்கள் ஒருதலைப்பட்சமாக இவ்வதிகாரங்கள் வழங்கப்படுவதனால் முஸ்லிம்களுக்கு ஏதாவது சாதக சூழ்நிலை இருக்கின்றதா? அல்லது ஆகக்குறைந்தது பாதகம் இல்லாமலாவது இருக்குமா என்பது தொடர்பாக இது வரை எந்தவொரு விளக்கத்தினையும் அளிக்க வில்லை.

அதேநேரம் ஆங்காங்கே முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் சில பேனா பிடிப்பவர்களும் காணி, பொலிஸ் அதிகாரம் பறிக்கப்படுமானால் அது சிறுபான்மையினருக்குச் செய்கின்ற துரோகம் என்ற பொதுமையான வசனத்தை மாத்திரம் பாவிக்கின்றார்களே தவிர அது தொடர்பாக முஸ்லிம்களுக்கு ஏற்படுகின்ற சாதக பாதக விளைவுகள் தொடர்பாக எந்த விளக்கத்தையும் அளித்ததாகத் தெரியவில்லை.

இன்று முஸ்லிம்கள் ஒருவித மூளைச்சலவை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு ஒருபுறம் தங்களை முஸ்லிம்களின் பிரதான கட்சி என்று அழைப்பவர்கள் யுத்த நிறுத்த காலத்திலிருந்து சில மேற்கத்தேய சக்திகளின் பின்னணியில் தொடர்சியாக முஸ்லிம்களுக்கு ஏற்படும் விளைவுகள் பற்றிக் கருத்துக் கூறாது மட்டற்ற அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவாக தொடர்ச்சியாக செய்யப்பட்டு வந்த பிரசாரமும் மறுபுறத்தில் சில ஊடகங்கள் தமிழ் தரப்பிற்கு சாதகமான வற்றை சிறுபான்மைகள் என்ற வரவிலக்கணத்திற்குள் பொதுமைப்படுத்தி செய்து வந்த பிரசாரமுமாகும்.

இதன் விளைவாக இன்று முஸ்லிம்கள் காணி, பொலிஸ் அதிகாரங்களினால் தமக்கு ஏற்படப் போகும் தாக்கங்கள் என்ன? என்ற கேள்விகளைக் கூட தமக்குள் எழுப்ப மறந்து அதிகாரப் பகிர்வில் குறைப்புச் செய்வது சிறுபான்மைகளுக்கு எதிரான செயல். எனவே அது முஸ்லிம்களுக்கும் எதிரான செயல் என்ற ஒரு பார்வையை தன்னகத்தே கொண்டிருக்கின்றார்கள்.

பொலிஸ் அதிகாரத்தை எடுத்துக் கொண்டால் இன்று பாதுகாப்பு தொடர்பாக எழுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் ஒரேயொரு ஜனாதிபதியைத் தான் அணுக வேண்டும். ஆட்சியில் இருக்கின்ற ஜனாதிபதி சிறுபான்மைகளை அரவணைத்துச் செல்கின்ற ஒருவராக இருந்தால் சிறுபான்மைகள் தமது பாதுகாப்பு தொடர்பாக கவலைப்பட வேண்டிய தேவையே இருக்காது.

# கூட்டமைப்பு பதிவு விரைவில்

# நம்பிக்கை கொள்ளும் சிவாஜிலிங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது உள்ளிட்ட விடயங்களில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில், ரெலோ மற்றும் இலங்கைத் தமிழரசு கட்சிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளின் இரண்டாம் சுற்று இடம்பெற்றபோதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதன் போது, இந்த விடயங்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் இணைந்து பேச்சு வார்த்தை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் எதிர்வரும் ஜுன் மாதம் வவுனியாவில் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர். கட்சிப் பதிவு தொடர்பில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## கடலுணவுக்கு கிராக்கி

(ஆனைக்கோட்டை)

வெசாக் தினத்தையொட்டி இறைச்சிக் கடைகள் யாவும் மூடப்பட்டுள்ளதால் ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய் பகுதியில் கடலுணவுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி சந்தைகளில் மீன்கள், இறால்கள் என்பன அதிக விலைக்கு விற்கப்பட்டன.

அதிக விலையைப் பொருட படுத்தாமல் மக்கள் இவற்றை வாங்கிச் செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

(104)

# நெருக்கடியில் அரசு; மீட்சிக்கு வாய்ப்பில்லை

## மின்கட்டண அதிகரிப்புக்கு கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.பி.வி கொழும்பில் நடத்திய மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிரான பாத யாத்திரையின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது சமாளிக்க முடியாத பொருளாதார நெருக்கடியை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது. இதன் காரணமாகவே அரசாங்கம் தற்போது பொதுவான கட்டணங்கள் அனைத்தையும் அதிகரித்து வருகிறது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் விடுகின்ற தவறுகளால், பொதுமக்களே பாதிப்படைவதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.


# மக்களைப் பணயம் வைத்து பதவிகளைக் காப்பாற்றும் துரோக அரசியல்

சங்கர சிவன்

**மாகாண சபைத் தேர்தலின்போது வழமையான பாணியில் ஒப்பாரிப் பிரசாரம் செய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதே தயாராகின்றது. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பாதிப்புகளைத் தேர்தல் மேடைகளில் பட்டியல் போடுவார்கள். பாதிப்புகள் இருப்பதை இவர்கள் சொல்லித்தான் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றில்லை. தமிழ் மக்களுக்கு அது தெரியும். பாதிப்புகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியைக் காட்டுவதற்கே தலைவர்கள் தேவை. அந்த வழியைக் காட்டாமல் பாதிப்புகளைப் பட்டியல் போட்டு உசுப்பேற்றும் பேச்சுக்களைப் பேசுவது வாக்குகளுக்காகவேயொழிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவல்ல.**

வடமாகாண சபைத் தேர்தல் கதவைத் தட்டுகின்றது. இந்தத் தேர்தல் நடக்குமா அல்லது நடக்காதா என்று சந்தேகக் கேள்விகள் எழுகின்றபோதிலும், தேர்தல் நடப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

மாகாண சபைத் தேர்தலின்போது வழமையான பாணியில் ஒப்பாரிப் பிரசாரம் செய்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதே



தயாராகின்றது. தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பாதிப்புகளைத் தேர்தல் மேடைகளில் பட்டியல் போடுவார்கள். பாதிப்புகள் இருப்பதை இவர்கள் சொல்லித்தான் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றில்லை. தமிழ் மக்களுக்கு அது தெரியும். பாதிப்புகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியைக் காட்டுவதற்கே தலைவர்கள் தேவை. அந்த வழியைக் காட்டாமல் பாதிப்புகளைப் பட்டியல் போட்டு உசுப்பேற்றும் பேச்சுக்களைப் பேசுவது வாக்குகளுக்காகவேயொழிய மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவல்ல.

நான்கு வருடங்களாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் எதிர்ப்பு அரசியல் நடாத்துகின்றார்கள். நிலம் பறிபோகின்றது. தமிழினம் அழிகின்றது என்றெல்லாம் உணர்ச்சிகரமாகப் பேசுகின்றார்கள். எடுத்ததற்கெல்லாம் மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றார்கள். இவற்றினால் ஏதாவது பலன் கிடைத்ததா என்று தமிழ் மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இராணுவப் பிரசன்னம், சிங்களக் குடியேற்றம், நில அபகரிப்பு என்று நீளமாகப் பட்டியல் போடும் கூட்டமைப்புத் தலைவர்கள் இவற்றுக்கெல்லாம் தாங்களே பிரதான பொறுப்பாளிகள் என்பதைத் தமிழ் மக்களிடமிருந்து கெட்டித்தனமாக மறைத்துவிடுகின்றார்கள். அரசாங்கத்தின் மீது முழுப் பழியையும் போட்டுத் தப்பித்துக் கொள்கின்றார்கள். சந்திரிகாவின் அரசாங்கம் முன்வைத்த அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வர முடியாமற்போனதற்கு இந்தத் தலைவர்களே பிரதான பொறுப்பாளிகள். அந்தத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால் தமிழ் மக்கள் இப்போது முகங்கொடுக்கும் சமகாலப் பிரச்சினைகள் தலைதூக்கியிருக்கமாட்டா. புலிகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வர முடியாத நிலையை உருவாக்கிய கூட்டமைப்புத் தலைவர்களே தமிழ் மக்களின் இன்றைய அவலங்களுக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பாளிகள். தமிழ் மக்களுக்குத் தாங்கள் செய்த துரோகத்தை மூடி மறைப்பதற்காக வீரவசனங்கள் மூலம் மக்களைத் திசைதிருப்பி ஏமாற்றுகின்றார்கள்.

தலைவர்களின் வீரவசனங்களில் மயங்கி ஏமாறுபவர்களாகத் தமிழ் மக்கள் இருந்தது போதும். தேசியவாதத் தலைவர்களால் தாங்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பதையும் இனப்பிரச்சினையின் தீர்வுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களையெல்லாம் இத்தலைவர்கள் தங்கள் சுயநலத்துக்காக இழந்தார்கள் என்பதையும் தமிழ் மக்கள் உணர்ந்து சரியான பாதைக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது.

**தலைவர்களின் வீரவசனங்களில் மயங்கி ஏமாறுபவர்களாகத் தமிழ் மக்கள் இருந்தது போதும். தேசியவாதத் தலைவர்களால் தாங்கள் ஏமாற்றப்படுகின்றார்கள் என்பதையும், இனப்பிரச்சினையின் தீர்வுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களையெல்லாம் இத்தலைவர்கள் தங்கள் சுயநலத்துக்காக இழந்தார்கள் என்பதையும் தமிழ் மக்கள் உணர்ந்து சரியான பாதைக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது.**

அறுபது வருடங்களுக்கு மேலாகக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தவறியதற்கான விளக்கத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்க வேண்டிய கடப்பாடு தேசியம் பேசும் தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. இச்சந்தர்ப்பங்களில் தாங்கள் விட்ட தவறுதான் தமிழ் மக்களுக்கு அவல வாழ்க்கையைக் கொடுத்திருக்கின்றதென்பது இவர்களுக்குத் தெரியும். தமிழ் மக்கள் இத்தவறுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்பதால் ஆக்ரோஷமான எதிர்ப்பு அரசியலை நடாத்தி மக்களைத் திசை திருப்புகின்றார்கள்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் பற்றி இன்று கூட்டமைப்புத் தலைவர்கள் அதிகம் பேசுகின்றார்கள். அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால் இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் சம்பந்தன் கூறினார். ஆனால், 1965இலும் 1972இலும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் சரத்துகளை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. தமிழ்த் தலைவர்கள் அவற்றைப் பயன்படுத்தவில்லை. அதன் பின்னர் கிடைத்த மற்றைய சந்தர்ப்பம் சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம். புலிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டுத் தமிழ்த் தலைவர்கள் இத்தீர்வுத் திட்டத்தை எதிர்த்தது தமிழ் மக்களுக்குச் செய்த மிகப் பெரிய துரோகம்.

இப்போதாவது தங்கள் தவறை உணர்ந்து சரியான பாதையில் செல்வதற்குத் தமிழ்த் தலைவர்கள் தயாராக இல்லை. எதிர்ப்பு அரசியல் நடாத்தி அரசாங்கத்துக்கு எதிராக வசைபாடுவதன் மூலம் தங்கள் துரோகத்தை மறைப்பது தான் இவர்களின் நோக்கமாக இருக்கின்றதேயொழியத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதல்ல. பிரச்சினையின் தீர்வில் உண்மையாகவே அக்கறை உண்டென்றால் இதுவரையில் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்க வேண்டும்.

இனப்பிரச்சினையாக இருந்தாலும், மக்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினையாக இருந்தாலும் அரசாங்கமே தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும். வெளியிலிருந்து யாராவது தீர்வைக் கொண்டுவர முடியாது. எனவே, தீர்வு தொடர்பாக அரசாங்கத்துடன் பேசுவதைத் தவிர்க்க முடியாது. கூட்டமைப்புத் தலைவர்கள் அரசாங்கத்துடன் பேச விரும்பவில்லை. அரசாங்கத்துடன் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை என்று மொட்டையாகக் கூறுகின்றார்கள்.

கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துபவர்கள் தந்தை செல்வாவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்று அண்மையில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்கள். பதிவு விடயத்தில் தந்தை செல்வாவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்றால் பேச்சுவார்த்தை விடயத்தில் பின்பற்றக்கூடதா?

கச்சேரியடிச் சத்தியாக்கிரகம் நடைபெற்ற வேளையில் அரசாங்கத்தின் சார்பில் அன்றைய நீதி அமைச்சர் சாம் பி.சி. பெர்னாண்டோ பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தார். பேச்சுவார்த்தைக்குப் போவது போராட்டத்தைப் பலவீனப்படுத்திவிடும் என்று அமிர்தலிங்கமும், நாகநாதனும் எதிர்த்தார்கள். அப்போது எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்.

பேச்சுவார்த்தைக்கு எந்தச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதைக் கைவிடலாகாது. பேச்சுவார்த்தை தோல்வியில் முடியும் என்பது தெளிவாகத் தெரியும் சந்தர்ப்பங்களிலும் பேச்சுவார்த்தைக்குப் போய் அது தோல்வியில் முடிவதைக் காண்பதே சிறந்தது.

எடுத்ததற்கெல்லாம் தந்தை செல்வாவின் முன்மாதிரி பற்றிப் பேசும் தமிழ்த் தலைவர்கள் இந்த முன்மாதிரியைப் பின்பற்றத் தயங்குவது ஏன் என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனும் கேட்டுச் சிந்திக்க வேண்டும்.

அரசியல் தீர்வை நிராகரிக்கும் புலம்பெயர் அமைப்புகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களாகவே தேசியம் பேசும் தமிழ்த் தலைவர்கள் உள்ளனர். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முன்வந்தால் புலம் பெயர் அமைப்புகளின் கோபத்துக்குஆளாக நேர்ந்துவிடும் என்று இவர்கள் அஞ்சுகின்றார்கள். அதனாலேயே பேச்சுவார்த்தையைத் தவிர்க்கின்றார்கள். புலம் பெயர் அமைப்புகளின் பாராட்டைப் பெறுவதற்கும் தங்கள் அரசியல் பதவிகளைக் காப்பாற்றுவதற்கும் இது சிறந்த வழி என்று கருதுகின்றார்கள்.

கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறுவது பாரதூரமான விளைவுகளுக்கு வழிவகுத்துவிடும். தமிழ் மக்களின் அரசியலில் இது தான் நடந்தது. சந்தர்ப்பங்களை உதாசீனம் செய்த தலைவர்கள் சகல சுகபோகங்களுடன் வாழ்கின்றார்கள். தமிழ் மக்கள் துன்பங்களையும் துயரங்களையுமே அனுபவிக்கின்றார்கள். சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த இன்றும் தலைவர்கள் தயாராக இல்லை. மக்கள் இப்போது விழிப்படையாவிட்டால் அடுத்த சந்ததிக்கும் இந்தச் சோகம் தொடரும்.

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை முறித்துக்கொள்கிறது கொழும்பு

## சவுதியுடன் கைகுலுக்க முடிவு

(கொழும்பு)

பெற்றோலியப் பொருட்களின் விநியோகம் தொடர்பாக இந்தியாவுடன் உள்ள உடன்படிக்கையை முறித்துக் கொள்வதற்கு இலங்கை முடிவு செய்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எண்ணெய் விநியோகம் தொடர்பாக இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துடன் (ஐ.ஓ.சி) ஏற்கனவே செய்து கொண்டுள்ள உடன்பாட்டை இரத்துச் செய்யவுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை, ஐ.ஓ.சி நிறுவனத்துடனான உடன்பாட்டை இரத்துச் செய்து விட்டு சவுதி அரேபியாவின் அராம்கோ நிறுவனத்துடன் உடன்பாடு செய்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அராம்கோ நிறுவனத்திடம் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் செயற்பாடுகளை ஒப்படைப்பதற்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே அண்மையில் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, ஐ.ஓ.சி.க்கு வழங்கப்பட்ட எண்ணெய் விநியோக உடன்பாட்டை இரத்துச் செய்தால், அதன் 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களும் மூடப்படும் நிலை ஏற்படும். அதற்குப் பதிலாக அராம்கோ நிறுவனம் 250 எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.ஓ.சி நிறுவனம் தரம்குறைந்த எரிபொருளை விநியோகிப்பதாக அண்மையில் இலங்கை அரசாங்கம் குற்றம்சாட்டியிருந்தது.

## பலப்படுத்தப்படுகிறது விமானப்படை நவீன உலங்குவானூர்திகள் இணைப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்குப் பலம் சேர்க்கும் முகமாக நவீன உலங்கு வானூர்திகளை இணைத்துக்கொள்வதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

எம்.ஐ. 171 ரகத்தைச் சேர்ந்த பத்து நவீனரக வானூர்திகளே இவ்வாறு முதற்கட்டமாக விமானப்படையில் இணைத்துக்கொள்ளப்படவிருக்கிறன.

இதனால் விமானப்படையின் பலம் மேலும் அதிகரிக்கவுள்ளது என்று விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இலங்கை விமானப் படையுடன் இணைக்கப்படவுள்ள எம்.ஐ. 171 வகை உலங்கு வானூர்திகள் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன. இவ் வகையான 10 உலங்கு வானூர்திகள் விரைவில் இலங்கை விமானப் படையில் இணைக் கப்படவுள்ளன. ஹெலி ட்ரெவல்ஸ் நிறுவனத்தில் இருந்து இந்த உலங்கு வானூர்திகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## அரச காணியில் அத்துமீறல் சட்ட நடவடிக்கைக்கு தயார்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள எமிழ்நகர் பகுதியில் அடாத்தாகப்பிடித்த காணிகளை விட்டு வெளியேறுமாறு மன்னார் பிரதேசச் செயலாளர் டி.தயானந்தா உரிய தரப்பினரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் எமிழ்நகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள அரச காணியினை அத்துமீறி அடாத்தாகப் பிடித்து தற்போது குறித்த காணிகளில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமிழ்நகர் கிராம சேவையாளரினால் கடந்த மாதம் 17 ஆம் திகதி மன்னார் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பகுதியில் அரச காணிகளில் குடியிருக்கும் மக்களை தாங்கள் அமைத்துள்ள தற்காலிக குடிசைகள் மற்றும் சுற்று வேலிகளை பிரித்து காணியை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான கடிதம் கடந்த வியாழக்கிழமை உரிய தரப்பினருக்கு தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனை மீறி தொடர்ந்தும் காணிகளில் இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் பிரதேசச் செயலாளர் டி.தயானந்தா தெரிவித்துள்ளார்.

## இளம் பெண்ணின் வயிற்றில் ஊசி முளைத்த அதிசயம்!

### சத்திரசிகிச்சையில் அசமந்தம் காரணமா?

(கொழும்பு)

பெண்ணொருவருக்கு அறுவை சிகிச்சை செய்யும் போது அப்பெண்ணின் வயிறுக்குள் ஊசியினை வைத்து தைக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா ம.்ரூப் நகரினைச் சேர்ந்த பெண் ஒருவரின் வயிற்றுப் பகுதியை அறுவை சிகிச்சை செய்யும் போதே ஊசியொன்று வைத்து தைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அறுவை சிகிச்சைக்குப் பின்னர் குறித்த பெண்ணுக்கு ஏற்பட்ட வயிற்று வலி காரணமாக கடந்த 22 ஆம் திகதி வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

அப்பெண்ணின் வயிற்றுப் பகுதியை 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்தபோது வயிற்றுக்குள் ஊசி இருப்பது கண்டறியப்பட்டது.

இதனால்,மீண்டும் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்காக அப்பெண் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படுவதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

## வெசாக் உற்சவத்தில் புகுந்தது காட்டு யானை

### களோபரத்தில் 24 பேர் காயம்

(பதுளை)

வெசாக் ஊர்வலத்தில் காட்டு யானை புகுந்ததால் ஏற்பட்ட களோபரத்தில் இருபத்தி நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்த யானை புகுந்ததால் இக்குழப்பம் ஏற்பட்டது.

12 பதுளை முத்தையாங்கனை ரஜமஹாவிகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊர்வலத்தின் போது யானை ஒன்று புகுந்து குழப்பம் விளைவித்ததில், ஊர் வலத்தை பார்வையிட வந்த 24 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களுள் 14 பெண்களும், ஒரு சிறு குழந்தையும் உள்ளடங்குவதாக காவற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தற்போது பதுளை தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

எனினும் யானையை உடனடியாக மயக்கமடையச் செய்து, நிலைமை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதற்கிடையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் விசாக பூரணை தினத்தை பார்வையிட வந்த பார்வையாளர்களுள் 250 பேர் வரையில் பல்வேறு காரணங்களுக்காக தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் மாணவன் மரணம் அதிபர் உட்பட மூவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி பொத்தானை ஆற்றில் மூழ்கி மரணமான சாரண இயக்க மாணவனின் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வாழைச்சேனை பொலிஸார், அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்களை கைது செய்து வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியுள்ளனர்.

வாழைச்சேனை பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தைச் சேர்ந்த பதினைந்து மாணவ குழுவினரை அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் சாரணர் பயிற்சிக்காக நேற்றுமுன்தினம் காலை 08.30 மணியளவில் அங்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

இவ்வாறு சென்ற மாணவர்கள் நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் குறித்த மாணவன் நீரில் மூழ்கி உயிர் இழந்துள்ளார். இதனைத் தொடர்ந்து நீரில் மூழ்கி மரணமான மாணவனின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மரணம் தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்றன.

வாழைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் தரம் 09 இல் கல்வி கற்கும் பதுர்தீன் பாயிஸ் (வயது 14) என்றழைக்கப்படும் மாணவரே உயிர இழநதவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட வாழைச்சேனை பொலிஸார் - அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் வாழைச்சேனை மாவட்ட நிதவான் நீதிமன்றத்தில் பதில் நீதிபதி எம்.பி.எம்.ஹுஸைன் முன்னிலையில் ஆஜர்படுத்திய தறகணங்க இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜர் படுத்துமாறு பொலிஸாருக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

## துறைமுக தீவிபத்துக்கு சதிமுயற்சி காரணமா?

(மன்னார்)

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியசாலையொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை தீ பரவியமைக்கான காரணத்தை கண்டறியும் பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலையொன்றில் பரவிய தீ பின்னர் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் ஆடைக் களஞ்சியசாலையிலேயே நேற்று முன்தினம் அதிகாலை தீ பரவியது.

தீயைக் கட்டுபடுத்துவதற்காக 8 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக தீயணைப்பு சேவைகள் தீணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீயினால் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவும், கடற்கரை பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



கே.ஹேமபாலவினால் வடிவமைக்கப்பட்ட, 100 அடி அகலமும் 50 அடி உயரமும் கொண்ட மிகப்பெரிய பௌத்த கொடி, இன்று காட்சிப்படுத்தப்பட்டது. பொறளை, பேஸ்லைன் வீதியில் இக்கொடி காட்சிப்படுத்தப்பட்டது.

# 56 கோடி 62 இலட்சம் ரூபா செலவில்
# யாழில் மின்விநியோகப் பணிகள் பூர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் "வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ் 56 கோடி 62இலட்சத்து பத்தாயிரம் ரூபா செலவில் உயர் மற்றும் மத்திய மின் அழுத்த, கிராமிய மின் வழங்கும் செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தத்தின் மின் விநியோகத் திட்டத்தின் கீழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் நேரடிநெறிப்படுத்தலில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் மிக நீண்டகாலமாக மின்விநியோகம் மேற்கொள்ளப்படாத பிரதேச மக்கள் பயனடைந்துள்ளனர்.

இதனடிப்படையில், உயர் மின்னழுத்த விநியோக மார்க்கத்தில் சோரன்பற்று - ஆனையிறவு வரையான 6 கிலோ மீற்றர் நீளமான உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 1கோடி 20 இலட்சத்து 41ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், புதுக்காட்டில் 280 மீற்றர் நீளமான உயர் மின்னழுத்த உள்ளக இணைப்பு 5 இலட்சத்து 81ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், 180 மீற்றர் நீளமான காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் மருதபுரம் கிராமத்திற்கான உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 7 இலட்சத்து 7 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், 5.3கிலோ மீற்றர் நீளமான மண்டைதீவிற்கான உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 1கோடி 27இலட்சத்து 24 ஆயிரம் ரூபா நிதியிலும், 770 மீற்றர் நீளமான சோரன்பற்றுக்கான நேரடி உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 20இலட்சத்து 58 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனுடன், 4.6 கிலோ மீற்றர் நீளமான சோரன்பற்று - தாளையடி உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 1 கோடி 6இலட்சத்து 22 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், 3.2 கிலோ மீற்றர் நீளமான பளை - சோரன்பற்று உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 61 இலட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், 3.4 கிலோ மீற்றர் நீளமான மிருசுவில் - பளை முதலாம் கட்ட உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 67 இலட்சத்து 89ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், இரண்டாம் கட்டமாக 4கிலோ மீற்றர் நீளமான மிருசுவில் - பளை உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 80 இலட்சத்து 81ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், 550மீற்றர் நீளமான கயட்டைப்புலம் வீதிக்கான உயர் மின்னழுத்த இணைப்புக்கள் 11இலட்சத்து 13ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கிராமங்களிற்கான மின்வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் நெடுந்தீவில் 42 இலட்சத்து 39ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 2 கிலோ மீற்றர் நீளமான உயர் மின்னழுத்த இணைப்பும், புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தில் 1கோடி 43 இலட்சத்து 17ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 2 கிலோ மீற்றர் நீளமான இணைப்பும், செல்வநாயகபுரத்தில் 2.45 கிலோ மீற்றர் நீளமான இணைப்புக்கள் 1 கோடி 8இலட்சத்து 46ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், காரைநகர் ஊரியில் 1.6கிலோ மீற்றர் நீளமான இணைப்புக்கள் 1 கோடி 84 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், 500 மீற்றர் நீளமான செந்தமிழ் சிசிகுறுக்கு, கலையொளி சிசிகுறுக்கு, சாந்தை, சூரிய வத்தை ஆகிய இடங்களிற்கும் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், சில பிரதேசங்களிற்கான மின்விநியோகப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அறியமுடிகின்றது. இதனுடன் மேலும் இருபது பிரதேசங்களிற்கான மின்விநியோக இணைப்புக்களிற்கான அனுமதி கோரப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (69)

# புத்துயிர் பெறுமா பேருந்துநிலையம்?

(வடமராட்சி)

நெல்லியடிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பழமைவாய்ந்த பேருந்து தரிப்பிடம் சுமார் ஒரு வருடங்களுக்கு முன் இடித்தழிக்கப்பட்ட நிலையில் எந்த வித மாற்று ஏற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளாத நிலையில் பயணிகள் பெரும் அவதியுறுவதைக் காணமுடிகிறது.

கடந்த வாரம் இப்பகுதிக்கு சென்றிருந்த வேளை சுட்டெரிக்கும் வெய்யிலின் மத்தியில் மக்கள் (பயணிகள்) வர்த்தக நிலைய வாசல்களில் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே ஒதுங்கி நின்று தமது பயணத்தை மேற்கொள்வதைக் காணமுடிகிறது.

வீதி அகலிப்புக்காக பழமைவாய்ந்த இக்கட்டடம் (பேருந்து நிலையம்) அழிக்கப்பட்ட நிலையில் மீண்டும் இதே இடத்தில் அமையுமா? அல்லது இதே அவலந்தானா என்று பயணிகள் தரப்பு கருத்துத் தெரிவிக்கின்றனர். (150)

# கால்நடை வைத்தியஅதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சினால் கால்நடை உற்பத்தி சுகாதாரசேவையின் வகுப்பு ii தரம் ii இல் காணப்படும் கால்நடை வைத்தியஅதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு மிருக வைத்திய பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியும். வயது 20இற்கும் 35இற்கும் இடைப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத்துறையில் நான்கு வருடப்பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல் நிலையுடையவர்களாக இருத்தல் அவசியம்.

விண்ணப்பிக்கும் முறையும், ஏனைய சேவை நியதிகள், நிபந்தனைகளை 23.05.2013 அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி 21.06.2013 ஆகும். (105)

# கொடியேற்றம்

(கல்வயல்)

ஏ9 பிரதான வீதியில் அமைந்துள்ள கைதடிப்பகுதி கைதடி பிள்ளையார் ஆலய கொடியேற்ற உற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்களுக்கு திருவிழா இடம்பெறவுள்ளதுடன் இவ் ஆலய திருவிழாவிலே அனைத்து அடியார்களையும் கலந்து விநாயகரின் அருளாசியை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (43)



**மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாலையடிப்பகுதியில் யுத்தம் நிறைவடைந்து 4 வருடங்களாகியும் எவ்வித புனரமைப்புமின்றிக் காணப்படும் பாலையடி உபதபாலகத்தைக் காணலாம். (140)**

# துரிதகதியில் புனரமைப்பு

கைதடிப் பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பும் நிலைய புனரமைப்புக்கள் துரிதகதியில் இடம்பெறுகின்றன. அப்பகுதிக்கான நிலம், மண் பறிக்கப்பட்டு மேலும் சிறந்த முறையில் செப்பனிடுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

இவ் எரிபொருள் நிரப்புநிலையமானது மிக முக்கிய பங்கினை வகிப்பதாகவும், இவ்வாறான புனர்நிர்மாண வேலைகளினால் தாம் பெரிதும் பயனடைவதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கொழும்பு செல்லும் பேருந்துகள் அதிகளவில் இவ் எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே மக்கள் எரிபொருளை நிரப்பிச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். (43)

# முரசின் இன்றைய பலன்

**(26.05.2013 - ஞாயிற்றுக்கிழமை)**

**விஜய வருஷம் வைகாசி மாதம் 12 ஆம் திகதி.**
**நட்சத்திரம் கேட்டை முன்னிரவு 7.56 வரை. திதி - பிரதமை காலை 8.07 வரை. இராகுகாலம் 4.22 - 5.52 வரை.**
**சுபநேரம் 08.52 - 10.22 வரை. சித்தம்.**

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

**மேடம்** – உதவி பெற்றவர், நன்றி மறந்து செயற்படுவர். இல்லறத்துணையின் ஆதரவு நம்பிக்கை தரும். தொழிலில் உள்ளதை பாதுகாப்பது நல்லது. செலவு அதிகரிக்கும். எதிர்மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகிச் செல்வது சிரமம் தவிர்க்க உதவும்.

**ரிஷபம்** – செயற் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். வெற்றி அதிகரிக்கும். தொழில், இடையூறு விலகி, சுபிட்சம் ஏற்படும். சராசரி பணவரவுடன், கடன் வசூலாகும். புத்திரர் விரும்பியது வாங்கித் தருவீர்கள். கலைஞர், மாணவர்க்கு வெற்றி.

**மிதுனம்** – நண்பரின் ஆதரவு, நம்பிக்கையை உருவாக்கும். கவனிக்காமல் விட்ட வேலையை கவனித்து முடிப்பீர்கள். தொழில் செழித்து ஆதாய பணவரவு. விரும்பிய பொருள் வாங்குவீர்கள். நன்மைகள் நடக்கும். நித்திரையில் இனிய கனவு.

**கடகம்** – பிறரது பொறாமையால், மனதில் சஞ்சலம் அடைவீர்கள். சொந்தப் பணியில் கவனம் கொள்க. தொழில், சராசரி அளவில். போட்டி இருக்கும். செலவுக்கு, சேமிப்புப் பணம் உதவும். போக்குவரத்தில் கவனம். உறவு தேடிவரும்.

**சிம்மம்** – உங்கள் சிரமங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், நேரம் தவறாமை நல்லது. உறவினர் வகையில், செலவு செய்ய நேரிடும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம். அறப்பணி புரிவீர்கள். ஒய்வு நேரத்தில், இசை இரசிப்பு.

**கன்னி** – சுயபெருமை பேசுவோரிடம் விலகுவது நல்லது. தொழிலில் வரும் அனுகூலத்தை பயன்படுத்த நன்மை. பணவரவு, சராசரி. கடனுக்கு கிடைக்கிறதென்று, பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். தாயின் அன்பு, மனதிற்கு ஊக்கம் தரும்.

**துலாம்** – மேம்போக்காக நடந்துகொள்வீர்கள். நன்மை தாமதமாகும். தொழில் வளர்ச்சிக்கு, நண்பரின் ஆலோசனை உதவும். பயன் தராத பொருள் வாங்க வேண்டாம். உடல்நலத்திற்கு உணவில் கவனம். போக்குவரத்திலும் கவனம்.

**விருச்சிகம்** – மற்றவர் வியக்கும் வகையில் செயற்படுவீர்கள். வாழ்க்கைத் தரம் உயர, புதிய வாய்ப்பு வரும். தொழிலில், தேங்கிய வேலைகளை முடிப்பீர்கள். உபரி வருமானம் கிடைக்கும். அரசு உதவி பெற அனுகூலம். மாணவர் உயர்வு.

**தனுசு** – நண்பருக்கு உதவுவீர்கள். தொழில், வியத்தகு முன்னேற்றம் பெறும். பணவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு, சலுகையும் நற்பயனும் ஏற்படும். உறவினர் வருகையால் குடும்பத்தில் குதூகலம். விருந்தும் கொண்டாட்டமும்.

**மகரம்** – பிறர் நலத்தில் அக்கறை கொள்வீர்கள். புதியவர்களின் நட்புக் கிடைக்கும். நெகிழ்வான தருணங்கள் உருவாகும். தொழில், அதிகம் வேலை செய்வீர்கள். ஆதாய பணவரவு. பெற்றோரை மகிழ்விப்பீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும்.

**கும்பம்** – அன்பு நிறைந்த மனதுடன் இருப்பீர்கள். தொழில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்திகரமாகும். நண்பரிடம் இருந்த கருத்து வேறுபாடு சரியாகும். விருந்தில் பங்கேற்பீர்கள். பிள்ளைகள் செயல் மனதை மகிழ்விக்கும்.

**மீனம்** – வரப்போகும் கஷ்டத்தை நினைத்து வருந்த வேண்டாம். நியாய, தர்மப்படி நடப்பதால் நன்மை பெறலாம். தொழில், தாமத கதியில். சிக்கனம் நல்லது. பாதுகாப்பில் கவனம் வேண்டும். குடும்பத்தினர் ஆதரவில் நிம்மதியாக உணர்வீர்கள்.

# ஐ.பி.எல். கிரிக்கெட் இன்று இறுதியாட்டம்

## அசத்தப்போவது யார்?

ஒன்பது அணிகள். மொத்தம் எழுபத்திரண்டு ஆட்டங்கள். ஒரு அணிக்குத் தலா பதினாறு ஆட்டங்கள். மிகக் கடுமையான லீக் போட்டி அட்டவணை. இவற்றையெல்லாம் தாண்டி Play Pff தகுதி நிலைக்கு வந்தன நான்கு அணிகள். அவற்றுக்குள்ளும் முதன்மை இரண்டு இடங்களையும் பிடித்தவை தலா 22 புள்ளிகளுடன் (தலா பதினொரு வெற்றிகள்) சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டிக்கு நேரடியாகத்தகுதிபெற்றுவிடும். அதனால் இரு அணிகளும் வெற்றியை இலக்காகக் கொண்டே களம் இறங்கின. திட்டமிட்டது போலவே சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் மைக் ஹசி மற்றும் முரளி விஜயின் இணைப்புடன் இலகுவாக ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கியது. முரளி விஜய் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்து சேர்ந்தவர்தான் சுரேஷ் ரெய்னா. இருவரும் புயலாக மாறி, மும்பை இந்தியன்ஸ் பந்து வீச்சாளர்களை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டார்கள். அதுவும் இருவரும் (ஹசி 86, ரெய்னா 82) சேர்ந்து மொத்த ஓட்ட எண்ணிக்கையான 192இல் 168 ஓட்டங்களைத் தமக்குள் பகிர்ந்து கொண்டார்கள். இருவருமே ஆட்டம் இழக்கவும் இல்லை. இந்த இருவரினதும் அதிரடியில் ஆரம்பத்திலேயே சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வெற்றி தெளிவாகத் தெரிந்துவிட்டது.

இருந்தும் மும்பை இந்தியன்ஸ் அணியின் டுவைன் ஸ்மித் ஆரம்பித்த விதமும் வேகமும் ஒரு கணம் எதிரணியை மிரட்டி விட்டதென்பதே உண்மை. இவரது மொத்த ஓட்ட எண்ணிக்கை 68. ஆரம்பத்தில் ஒவருக்குப் பத்து ஓட்டம் என்ற வேகத்திலேயே அதிரடியாக ஆடிச் சென்றார். உண்மையில் அவர் ஆட்டமிழந்தது தான் சென்னைக்கு வாய்ப்பாகப்போனது. அதன் பின் அணித் தலைவர் டோனியின் வியூகங்களுக்கு முன் எதிரணியால் ஈடுதொடுக்க முடியவில்லை. திறமை மிகுந்த பந்துவீச்சாளர்களின் மாற்ற முறைமை டோனியின் அணித் தலைமைக்குச் சிறப்பு. இதனால் 144 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸ் தோல்வி கண்டது. சென்னை சூப்பர் கிங்ஸ் இறுதி ஆட்டத்திற்குத் தகுதிபெற்றது.

இன்னொரு PLAY OFF ஆட்டம் பலமிக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கும், ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிக்கும் இடையில் நடை பெற்றது. எதிர்பார்த்தது போலவே குறைந்த ஓட்ட எண்ணிக்கையான 132ஐ சன் ரைசர்ஸ் பெற்றுக்கொள்ள வெற்றி இலக்கு அப்படி ஏதும் கடினமாக ராவிட்டின் அணிக்கு இருக்கவில்லை. இருந்தும் ஒரு கட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸின் யாக்னிக், பின்னி, சாம்சன் மூவரும் வந்தவேகத்தில் திரும்பிச் செல்ல ஒரு தடுமாற்றம். ஆனால், பிரட் ஹொஜ் எல்லோருக்குமாகச் சேர்ந்து துடுப்பெடுத்தாடி அணியை நிமிர்த்தி, அதிரடியாக 54 ஓட்டங்களையும் பெற்று சன்ரைசர்ஸ் அணிக்கு ஏதாவது நம்பாசை இருந்திருந்தால் அதற்கு இறுதி ஆணியை அடித்துவிட்டார். மேற்கூறப்பட்ட இரண்டு ஆட்டங்களிலும் அவுஸ்ரேலிய வீரர்கள் இருவரே மிகத் திறமையாக ஆடினார்கள். அவர்களே நாயகர்களாகவும் தெரிவாகினர்.

இரண்டாவது எலிமினேற்றர் ஆட்டத்தில் எதிர்பார்த்தது போலவே மும்பை இந்தியன்ஸ் வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் மளமளவென்று மூன்று விக்கெட்டுக்களை 24 ஓட்டங்களுக்குப் பெற்றபோதே அதன் முடிவு ஊகிக்கப்பட்டுவிட்டது. ஆனால் யாக்னிக், ஹொட்ஜ் இருவரும் இருபத்தேழு பந்துகளில் 58 ஓட்டங்கள் குவிக்கவே 165 என்ற சவாலான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மும்பை இந்தியன்ஸ் எதிர்பார்த்தது போலவே தமது வெற்றியைப் பதிவு செய்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்கள்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று இந்திய ரூபாய்கள் பத்துக் கோடியை அள்ளப்போகும் அணி எதுவென்பதே இப்போதைய கேள்வி. டோனியின் அணியில் மைக்கல் ஹைசி ரெய்னா மிகவும் கவனிக்கப்பட வேண்டியவர்கள். இவர்கள் நல்ல அடித்தளம் கொடுத்த ஆட்டங்கள் சூப்பர் கிங்ஸ் அணிக்கு வெற்றியாகவே முடிந்துள்ளது.

மறுவளம் மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ரோகித் சர்மா அனுபவம் குறைந்தவர் என்றாலும் அவருக்குப் பின்புலமாக சச்சின், றிக்கி பொண்டிங் இருவரும் இருப்பதைக் கவனிக்கவேண்டும். ருவென்ரி–20 துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டமாகையால் பந்து வீச்சாளர்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதே மிக முக்கியம். இதில் டோனி மிகச் சிறந்தவராகக் கவனிக்கப்படுகின்றார். அவரின் தலைமைத்துவ அனுபவமே எதிரணிக்கு கலக்கத்தைக் கொடுக்கும். எனவே இன்று இரவு வரை பொறுத்திருந்தால் இந்திய ரூபாய்கள் பத்துக் கோடியை வெல்லப் போகும் அந்த அணி எதுவொன்று தெரிந்துவிடும்.

—— ஜோசப் கிருஷ்ணா

**இடம் : கொல்கத்தா**

**இரவு : 8.00 மணி**



### அசத்திய வீரர்கள்

**அதிக ஓட்டங்கள்**



மைக்கல் ஹசி (சென்னை)
732 ஓட்டங்கள்
கிறிஸ் கெய்ல் (பெங்களூர்)
708 ஓட்டங்கள்
ஹோலி (பெங்களூர்)
634 ஓட்டங்கள்

**அதிக விக்கெட்டுக்கள்**



பிராவோ (சென்னை)
28 விக்கெட்டுக்கள்
பக்ல்னர் (ராஜஸ்தான்)
28 விக்கெட்டுக்கள்
வினாய் குமார் (பெங்களூர்)
23 விக்கெட்டுக்கள்

**ஒரு போட்டியில் அதிக ஓட்டங்கள்**



கிறிஸ் கெய்ல் (பெங்களூர்)
175 ஓட்டங்கள்
டேவிட் மில்லர் (பஞ்சாப்)
101 ஓட்டங்கள்
வட்சன் (ராஜஸ்தான்
101 ஓட்டங்கள்

**அதிக சிக்ஸர்கள்**

கிறிஸ் கெய்ல் (பெங்களூர்)
51 சிக்ஸர்கள்
ரோகித் சர்மா (மும்பை)
28 சிக்ஸர்கள்
போலாட் (மும்பை)
26 சிக்ஸர்கள்

## சூதாட்ட எதிரொலி பெப்சி விலக முடிவு

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் பிரதான அனு சரணையாளர்ாகவுள்ள பெப்சி குளிர்பான நிறுவனம் இருந்து வருகிறது. இதற்கான உரிமையை 5 ஆண்டுகளுக்கு ரூ.396.8 கோடிக்கு (இந்திய நாணயப் படி) ஒப்பந்த அடிப்படையில் பெப்சி நிறுவனம் பெற்றது. அதன் அடிப்படையில் இந்த போட்டி, பெப்சி ஐ.பி.எல். என்று அழைக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் வெடித்துள்ள சூதாட்ட சர்ச்சையால் பெப்சி நிறுவன்ம் கவலை அடைந்துள்ளது. சூதாட்ட புகாருக்குள்ளாகி இருக்கும் கிரிக்கெட் போட்டிக்கு அனுசரணையாக இருப்பதால், அது தங்களது நிறுவனத்திற்கு கெட்ட பெயரை ஏற்படுத்தி விடும் என்று கருதுகிறது. எனவே இந்த ஐ.பி.எல். சீசன் முடிந்ததும், ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு அளித்து வரும் அனுசரணையைத் திரும்பப் பெறுவது குறித்து மறுபரிசீலனை செய்ய முடிவு செய்திருப்பதாக, அதன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதல் ஐந்து ஐ.பி.எல். போட்டிக்கு கட்டுமான நிறுவனமான டி.எல்.எப். நிறுவனம் பிரதான அனுசரணையாக இருந்தது. அதற்கு அந்த நிறுவனம் இந்திய கிரிக்கெட் சபைக்கு ரூ.200 கோடி மட்டுமே வழங்கியது. ஆனால், பெப்சி நிறுவனம் அதை விட இரண்டு மடங்கு தொகை கொடுத்து அந்த உரிமையை வாங்கியது குறிப்பிடத்தக்கது.

## அசத் இந்தியாவைவிட்டு ஓட்டம்



(புதுடில்லி)

சூதாட்ட சர்ச்சையில் சிக்கிய பாகிஸ்தான் நடுவர் அசத் ரெளப், இந்தியாவில் இருந்து சாமர்த்தியமாக தப்பி விட்டார். விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பரிசுப் பொருட்களை டில்லி விமான நிலையத்திலேயே விட்டுச் சென்றார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த சர்ச்சைக்குரிய நடுவர் அசத் ரெளப். ஐந்தாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரின் போது, மும்பையை சேர்ந்த மொடல் அழகி லீனா கபூர், இவர் மீது பாலியல் புகார் கொடுத்தார். இதற்கு ஆதாரமாக சில போட்டோக்களை வெளியிட்டார். பின் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

தற்போதைய சூதாட்ட சர்ச்சையிலும் அசத் ரெளப் சிக்கியுள்ளார். இவர் 14 லீக் போட்டிகளில் நடுவராகக் கடமையாற்றியுள்ளார். இதில் மும்பையில் பங்கேற்ற இரு போட்டிகளில், அசத் செயல் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவரை விசாரிக்க மும்பை பொலிஸார் திட்டமிட்டிருந்தனர். இதனை அறிந்த அசத், இந்தியாவை விட்டு வெளியேறி விட்டார். சூதாட்டத்திற்கு உதவியதற்காக இவருக்கு புக்கி பவான் அனுப்பிய தங்க ஆபரணங்கள்,மணிக்கூடு, எலக்ட்ரோனிக் பொருட்கள் அடங்கிய பரிசுகளை டில்லி விமான நிலையத்தின் சரக்கு பகுதியில் அப்படியே விட்டுச் சென்றார். இவர் பாகிஸ்தானுக்கு தான் சென்றாரா என்ற விபரம் தெரியவில்லை.

## குருநாத் மெய்யப்பன் கைது



(மும்பை)

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக மும்பை பொலிஸாரால் குருநாத் மெய்யப்பன் நேற்று நள்ளிரவு கைது செய்யப்பட்டார். ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கிய இந்தி நடிகர் வின்டு தாராசிங் அளித்துள்ள வாக்குமூலம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுசென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் குருநாத் மெய்யப்பனுக்காக சூதாட்டத்தில் ஈடுபட்டதாக பொலிஸில் அவர் தெரிவித்துள்ளார்.இதனால், விசாரணைக்காக ஆஜராகும்படிகுருநாத்துக்கு மும்பை பொலிஸார் சம்மன் கொடுத்தனர். இதையடுத்து, கொடைக்கானலில் தங்கி இருந்த குருநாத், நேற்று முன்தினம் மாலை அவசரமாக மதுரை வந்தார்.

அங்கிருந்து தனி விமானத்தில் மும்பை சென்றார். அங்கிருந்து நேராக குற்றப்பிரிவு பொலிஸ் அலுவலகத்துக்குச் சென்று ஆஜரானார். அவரிடம் சூதாட்டம் குறித்து இரண்டரை மணி நேரம் வரை பொலிஸார் விசாரணை நடத்தினர். இதைத் தொடர்ந்து சூதாட்டத்தில் அவருக்கு தொடர்பு இருப்பதாக தெரிய வந்துள்ளதாகவும், அதையடுத்து அவரைக் கைது செய்ததாகவும் மும்பை குற்றப்பிரிவு பொலிஸ் இணை ஆணையாளர் ஹிமன் சுராய் தெரிவித்தார்.




காரைநகர் கல்வந்தாழ்வு ஸ்ரீ முருகன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 20ஆம் திகதி முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது. இதில் சிறார்களின் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. அத்துடன் சிறார்களின் பல நிகழ்வுகள் விருந்தினர்களையும் வியக்கவைக்கும் வகையில் அமைந்திருந்தன. முன்பள்ளித் தலைமை ஆசிரியர் சுதாமதி தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், யாழ். வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபர் கே.எஸ்.இளங்கோ, ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச இணைப்பாளர் வீ.கண்ணன், மானிப்பாய் கல்வாரி பூரண சுவிஷேச தேவாலய போதகர் செ.ஜெனோ காரைநகர் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் அ.புஸ்பராணி காரைநகர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். போட்டிகளில் பங்குகொண்ட சிறார்கள் அமர்ந்திருப்பதையும், சிறார் ஒருவருக்கு விருந்தினர் பரிசில் வழங்குவதையும் காணலாம்.

# தொழில்சார் துறையாக கால்பந்தாட்டத்தை மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்டத்தை தொழில் சார் துறையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைமையகமான கால்பந்தாட்ட இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

விளையாட்டுத் துறையின் அமைச்சராக பொறுப்பேற்ற நாள்முதல் இலங்கையில் வீழ்ச்சியடைந்துள்ள விளையாட்டுக்களை வளர்ச்சியடையச் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தி, அதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

எந்தவொரு விளையாட்டாக இருந்தாலும், வெற்றிபெறும் போது அணியையும், அதுசார்ந்த கழகங்கள் அல்லது சபைகளையும் பாராட்டும் விளையாட்டு இரசிகர்கள், தோல்வியடையும்போது மாத்திரம் அமைச்சுக்களையும், விசேடமாக அமைச்சர்களையும் குற்றம் கூறுவதோடு, அரசியல் செல்வாக்கு என்ற காரணத்தையும் சுட்டிக் காட்டுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கால்பந்தாட்டத்தை பொறுத்தவரையில் தேசிய அணியில் இடம்பிடித்துள்ளவர்கள் வெவ்வேறு தொழில்களைப் புரிபவர்களாக உள்ளமையினால் அவர்களால் முழு நேரத்தையும் கால்பந்தாட்டத்திற்காகவும், பயிற்சிக்காகவும் ஒதுக்க முடியாதுள்ளது.



இதன் பொருட்டு தேசிய அணியில் இடம்பிடிக்கும் வீரர்களுடன் உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்தி, அவர்களுக்கு தலா 50,000 ரூபாய் வரையான சம்பளம் வழங்குவதற்கும், வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் திட்டமிட்டு வருகின்றோம்.

இதன் மூலம் கால்பந்தாட்டம் என்பது தொழில்சார் விளையாட்டுத் துறையாக மாற்றமடைவதற்கு துணை புரிய முடியும்.

உள்நாட்டில் உள்ள பயிற்றுவிப்பாளர்கள் தமக்கு விருப்பமான வீரர்களை அணிக்குள் இணைத்துக் கொள்வதனால், திறமை வாய்ந்த வீரர்களுக்கான சந்தர்ப்பம் நழுவிப் போவதனால், பிரேசிலில் இருந்து பயிற்றுவிப்பாளர் ஒருவரும், அவரது உதவியாளரும் வரவழைக்கப்பட்டு, இலங்கை கால்பந்தாட்ட தேசிய அணிக்கு பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கையில் பாடசாலைகள் மத்தியிலும் கால்பந்தாட்டம் குறித்த ஆர்வத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களை விளையாட்டுத் துறை அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

அகில இலங்கை ரீதியில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் பிரதான பற்றாக்குறையாக அடையாளம் காணப்பட்ட மைதான வசதியின்மை என்பதனை தீர்ப்பதற்கு, மாகாண ரீதியில் 9 விளையாட்டரங்கங்களும், மாவட்ட ரீதியில் 25 விளையாட்டரங்கங்களும், பிரதேச செயலக ரீதியில் மூன்னூறுக்கு மேற்பட்ட விளையாட்டரங்கங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளது. 2016 ஆம் ஆண்டளவில் அனைத்து நிர்மாணங்களையும் பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## விளையாட்டுச் செய்திகள்


# உடுவிலில் நாளை மைலோ கிண்ண வலைப்பந்து

(உடுவில்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட மைலோக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி நாளைய தினம் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வருடா வருடம் நடத்தப்படும் இப்போட்டித் தொடரில் மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் 14,16,18 ஆகிய வயதுப் பிரிவு அணிகளே போட்டியிடவுள்ளன. இதில் பங்குகொள்ளவுள்ள அணிகள் குறித்த நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் சம்பியன் பட்டத்தை வெல்லும் அணிகள் நேரடியாக தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெறும் என்றும், மாகாண மட்டப் போட்டிகள் நடைபெறமாட்டாது எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)



வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத்தொடரின் 19 வயதுப் பிரிவு பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தை வென்ற கிடாச்சூரி கருவேப்பங்காடு அ.த.க. பாடசாலை அணி வீராங்கனைகள் பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம்.

# கூடைப்பந்தாட்ட செயலமர்வு

(கொழும்பு)

தெற்காசிய கூடைப்பந்தாட்ட சங்கத்தின் பிபா ஆசிய நிர்வாக செயலமர்வொன்றை எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்த இலங்கை கூடைப்பந்து சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது. உப பிராந்தியத்தின் செயலாளர் நாயகம், நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்லது தேசிய சம்மேளனத்தின் உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உப பிராந்தியம் மற்றும் தேசிய சம்மேளனத்தின் திறமையான கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் பிபா ஆசியாவின் செயலாளர் நாயகம் ஹகோப்ஹஜிரினா செயலமர்வை நடாத்தவுள்ளார்.

கூடைப்பந்து நீண்ட காலமாக விளையாடப்பட்டு வரும் ஒரு விளையாட்டாகவிருந்தாலும் உரிய கட்டமைப்பு இன்றி இந்த விளையாட்டு பாரிய சரிவுகளைச்சந்தித்திருந்தது. இந்த நிலையில் இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் சரத் ஏக்கநாயக்க தலைமையிலான புதிய நிர்வாகக் குழுவானது சரிவிலிருந்துகூடைப்பந்தாட்டத்தை மீட்டெடுப்பதற்கு சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக சிரேஷ்ட உபதலைவர் ரணில் பிரான்சிஸ்கோ தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடமிருந்து உரியஒத்துழைப்பும், ஆதரவும் கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்தோரும் இச்செயலமர்வில் பங்குகொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்த அமைதி நமக்கு வேண்டப்படாததா?

யுத்தம் முடிவடைந்து நான்காண்டுகள் கடந்து வந்திருக்கின்றோம். வெறுமனே கேள்வி எழுப்பினால் விடை உவப்பானதாக இருக்கப்போவதில்லை.

இப்போது இலங்கையில் எங்கும் குண்டு வெடிப்பதில்லை. நாள்தோறும் ஐம்பது நூறு என்று யாரும் கொல்லப்படுவதில்லை. மதகுருமாரினதும் பாடசாலை மாணவர்களதும் பஸ் வண்டிகள் வெடிவைத்து சரமாரியாக சுட்டுத்தள்ள இப்போ யாரும் வருவது இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு இலட்சம் முஸ்லிம்களை ஒற்றைநாளில் விரட்டியடிக்க இப்போ யாருமில்லை. ஏன் எமது மக்களின் மீது குண்டுபோட எந்த விமானங்களும் கூட இங்கே வருவதில்லை. பங்கர் வெட்டுவது தேசம் உவப்பானதில்லையா? இந்த நிலைமைகள் ஆரோக்கியமானதில்லையா? இந்த அமைதி நமக்கு வேண்டப்படாததா?

யுத்தத்தில் அழிந்து போன மக்களின் உயிர்களை வைத்து அரசியல் செய்யும் நமது தலைமைகள் அந்தக் கொடிய யுத்தத்திலும் தப்பி மீண்டெழுந்து வந்த எஞ்சிய மக்களின் எதிர்காலம் பற்றி அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. சிறிது காலம் கம்பி வேலி என்று காலத்தைக் கடத்துவதில் இருந்த சிரத்தை அவர்களின் வாழ்வு குறித்து அக்கறை கொள்வதில் இருக்கவில்லை. புலம்பெயர் தமிழர்கள் தமது வாழ்விட அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்து கொள்ளவும் அகதி அந்தஸ்துகளை பெற்றுகொள்ளவும் இலங்கைத் தமிழரின் அவலங்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்கின்றனரோ அதற்கு நிகராகவே தமிழ் தலைமைகளும் தமது அரசியல் இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள தக்க துருப்புச் சீட்டாக மக்களின் அவலங்களை பயன்படுத்த முனைகின்றார்கள். அதனால் தான் இவர்கள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து எந்தவொரு முடிவுக்கும் இதுவரை வர முடியாதுள்ளனர். அரசியல் தீர்வு என்றும் மக்களின் ஆணை என்று ஒவ்வொரு தேர்தலிலும் உரத்து குரல்கொடுக்கும் இவர்கள் இதுவரை காலமும் ஒரு அரசியல் தீர்வினை தயாரித்து அரசிடம் கையளிக்க முடியாதுள்ளனர்.

மீண்டும் மீண்டும் மக்கள் நலம் சாராத தமிழரசுக் கட்சியின் சால்வையை பிடித்துக்கொண்டு இன்று வரை டெலோவும் புளொட்டும் கூட்டணியும் ஏன் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும்? இவர்களை தமிழரசுக் கட்சியினர் ஒரு பொருட்டாகக் கண்டுகொள்வதேயில்லை. ஆனாலும் இவர்கள் வீட்டுச் சின்னத்தை விட்டு விலக தயாரில்லை. காரணம் பதவி யாசை மட்டுமேயாகும். குறைந்த பட்சம் அரசியல் நடவடிக்கைகளை சரியாக செய்ய முடியாவிடினும் போரில் பாதிக்கப்பட்டு எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொண்டு நிறுவனங்களாக தம்மை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் இந்த பழைய இயக்கங்களும் கட்சிகளும் தீவிர கவனம் செலுத்த முடியும்.



- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

முள்ளிவாய்க்கால் அழிவு, நினைவு தினங்கள், என்றவாறாக ஒவ்வொரு மே மாதத்தையும் சோக உணர்வுகளை தூண்டிவிடும் நாளாக மட்டும் நாம் கடந்து வந்து கொண்டிருக்கிறோம். யுத்தம் அற்ற பூமியாக நமது மண் ஆக்கப்பட்டிருக்கிறது. கடந்த முப்பது வருடகாலம் நமது சமுகம் இழந்து வந்த இழப்புகளுக்கெல்லாம் ஒரு முடிவு வந்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை நமது சமுகத்தின் எதிர்கால வாழ்வு நோக்கி நாம் எப்படி பயன்படுத்தப் போகிறோம்? யுத்தம் அற்ற கடந்த நான்கு வருடங்களையும் நாம் எவ்வாறு பயன்படுத்த முனைந்தோம்? என்று தகர்க்கப்படும் என்ற அச்சம் யாரிடமும் இல்லை. 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதிக்கு பின்னர் ஒரு அரசியல் தலைவர்களும் தற்கொலை குண்டுதாரியால் கொல்லப்படவில்லை. படுவான்கரை பாலகர்கள் யாரையும் பிடித்துச் சென்று அவர்களின் கழுத்துகளில் நஞ்சு குப்பிகளை கட்டிவிட இப்போது யாரும் இல்லை. டக்ளஸ் தேவானந்தாவையோ ஏன் சம்பந்தரையோ கூட துரோகியென்று பட்டம் கொடுத்து சினைப்பரால் கொலை செய்துவிட இப்போ யாரும் இல்லை. பள்ளிவாசல்களில் புகுந்து அங்கு தொழுது கொண்டிருப்பவர்களை எப்படியென்று இப்போது பிறக்கின்ற குழந்தைகள் கற்றுக்கொள்வதில்லை. இந்த

## கர்ப்பிணிகளின் பல்வலி



கர்ப்பத்திலிருக்கும் சிசுவுக்கு தாம் கொடுக்கும் மருந்துகளால் ஏதாவது தீங்கு நடந்து அதனால் சட்டப் பிரச்சினைகள் வரலாம் என பயந்து அமெரிக்காவில் கர்ப்பிணிகளுக்கு வைத்தியம் செய்ய பல பல்வைத்தியர்களும் மறுக்கிறார்களாம். பயங்கர பல்வலியுடன் ஆஸ்பத்திரிக்கு வந்த கர்ப்பிணி ஒருவர் மருத்துவ வசதி கிடைக்காமல் திருப்பப்பட்டு அவரது கன்னம் பொரிவிளாங்காய் உருண்டை அடைத்தது போல வீங்கிப் போனது மட்டுமன்றி அந்தக் கர்ப்பிணிக்கு பயங்கர வலி அவஸ்தை. பல்வைத்தியர்களுக்கு அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கர்ப்பிணிகளுக்கு வைத்தியம் செய்யக்கூடாது என படிப்பிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். பல்வைத்தியத்தின்போது எக்ஸ்ரே, மயக்கமருந்து, அன்டிபயொடிக் போன்றவற்றை உபயோகிக்க வேண்டியிருக்கையில் அது கர்ப்பத்திலிருக்கும் சிசுவை பாதிக்குமோ என்ற அச்சம்தான் இதற்குக் காரணம்.

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

07

**- டாக்டர்.பிரகாஷ் -**

குழந்தைகளுடன் சிறு சிறு நடன அசைவுகளை நீங்களும் மேற்கொள்ளவும். ஐந்து வயதிற்குள்ளாகவே, குழந்தைகளுக்கு நடனமாடக் கற்றுக் கொடுப்பது நல்லது. நடனம் என்றால், சரியான அபிநயம் பிடிக்க ட்ரில் வாங்குவது போன்ற கண்டிப்பான நடனம் அல்ல. குழந்தைகளே மகிழ்ந்து, அவர்கள் நம்மைப் பார்த்து இமிடேட் செய்யும், சில சமயம், அவர்கள் பாணியில் புதிய அசைவுகளைக் கொண்ட அவர்கள் மகிழ்ந்து சிரமமே இல்லாமல் செய்யும் நடனம்.

இசையும், நடனமும் குழந்தைகளின் புலன்களுக்கு இனிமையாகவும், தாளகதியுடனும் இருத்தல் அவசியம். பாடலின் அர்த்தத்தை விட ஒலியின் அழகை அவர்களை இரசிக்க வைக்கச் செய்ய வேண்டும். உயிர்ப்புள்ள அசைவுகளும், பதிவுகளும், அவர்கள் காதுகளையும், மனதையும் மகிழ்விக்கின்றன. தாள கதியில் இருக்கும் நடன அசைவுகள் உடல் உறுப்புகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

இசையைக் கற்பிக்க சில டிப்ஸ்:

1. பாடல்களைப் பாடவும்: சூழ்நிலைக்கேற்றவாறு, உறங்க வைப்பதற்கோ, வெளியில் அழைத்துச் செல்கையிலோ அதற்கேற்ற விதமான பாடலைப் பாடவும். குழந்தை பாடா விட்டாலும், அதனுடன் தொடர்புடைய செயலை (கைதட்ட, தலையாட்ட) செய்ய ஏதுவாக இருக்கும்.

2. நீங்களே முழுப் பாடலையும் பாடவும். வரி வரியாக சொல்லித் தர முயற்சிக்காமல், முழுப்பாடலையும், குழந்தை கவனிக்குமாறு பாடவும். ஒரே பாடலை பலமுறை பாடிக் காட்டவும்.

3. பாடலின் எல்லா வார்த்தைகளையும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க முயற்சிக்காதீர்கள்-எவ்வளவு தெரிகிறதோ அவ்வளவு பாடட்டும். அதுவே இன்பமாக இருக்கும்.

4. பாடலின் ராகம், டெக்னிக் போன்றவைகளை வலியக் கற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டாம். அவர்கள் எப்படிப் பாடுகிறார்கள் என்பதை விட பாடுகிறார்கள் என்பது முக்கியமானது.

5. குழந்தையின் பாடலை ஒலிப்பதிவு செய்து அவர்களுக்கு மீண்டும் போட்டுக் காட்டவும். அந்தப் பாடலுக்கே அவர்களை ஆடச் சொல்லவும்.

6. அவர்களுக்கு நன்கு தெரிந்த பாடல், ரைம்ஸில் அதில் வரும் பெயரை எடுத்து விட்டு, அவர்கள் பெயரைப் போட்டுப் பாடவும். உதாரணம்: ஜானி ஜானி எஸ் பாப்பா

7. மிக மெதுவாக, குழந்தை நீங்கள் விட்ட சொல்லை நிரப்புமாறு பாடவும்.



உதாரணம்:
ட்விங்கிள்
ட்விங்கிள் லிட்டில்
............... ஹவ் ஐ
வொண்டர் வாட் யூ
...............

இசையுடன் அபரிமிதமான ஈடுபாட்டில் இருக்கும் குழந்தையின் அறிவு வளர்ச்சி அதிகரிப்பதோடு மட்டுமல்ல, பிற்காலத்தில் இசையை நன்கு இரசிக்கும் ஒரு இசை இரசிகனாகவும் அவனை மாற்றுகிறது.

எனவே, ஸ்டார்ட் ம்யூஸிக்.

(தொடரும்)

# எந்த ஊர் என்றவனே

ஒருவர் நமக்கு அறிமுகமான சில நிமிடங்களில் கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று - "நீங்க எந்த ஊர்? என்பது. ஒரே ஊர் என்றோ அருகிலுள்ள ஊர் என்றோ தெரிந்தால் உடனே ஒரு புன்முறுவல். நட்பு சுலபமாகும். நாம் பிறந்து வளர்ந்த ஊரை நினைத்தாலே சந்தோஷம் பொங்கும்.

ஊர்ப்பெயர்களை அதன் வேர்ச்சொல் அறிந்து ஆராய்வது ஒரு பெரிய சவால்.



- மோகனகிருஷ்ணன் -

இடப்பெயராய்வு. கல்வெட்டு, புத்தகங்கள், பதிவேடுகள், செப்பேடுகள், கர்ணபரம்பரைக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழி கள், சொலவடைகள், விடுகதைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட ஊர்கள் இடம்பெற்ற விதத்தையும், அந்த ஊர்களின் மக்களுடைய வாழ்க்கைத் தரம், பொருளா-தாரம், தற்போதைய நிலை உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்தும் பல ஆய்வுகள் உண்டு.

ஒரு கவிஞனை எந்த ஊர் என்றால் என்ன சொல்வான்?

கண்ணதாசன் காதல் தோல்வி சொல்ல ஒரு பாடலில் பிறப்பில் தொடங்கி ஆணின் அன்றைய காதல் தோல்வி status வரை ஊர்ப்பெயர்களை எழுதிய வரிகள் அருமையான கற்பனை. எந்த ஊர் என்றவனே இருந்த ஊரைச் சொல்லவா? என்று தொடங்கும் பாடலில் வரும் கற்பனை ஊர்ப்பெயர்கள் - பேச்சு வழக்கில் இருக்கும் வார்த்தைகளை ஊர் போல சொல்வார்.

உடலூரில் வாழ்ந்திருந்தேன்
உறவூரில் மிதந்திருந்தேன்
கருவூரில் குடி புகுந்தேன்
மண்ணூரில் விழுந்து விட்டேன்!

என்று பிறப்பையும், பின் வரும் வரிகளில்,

வேலூரைப் பார்த்து விட்டேன்
விழியூரில் கலந்து விட்டேன்
காதலூர் காட்டியவள்
காட்டூரில் விட்டுவிட்டாள்
கன்னியூர் மறந்தவுடன்
கடலூரில் விழுந்துவிட்டேன்!
பள்ளத்தூர் தன்னில் என்னை
பரிதவிக்க விட்டு விட்டு
மேட்டூரில் அந்த மங்கை
மேலேறி நின்று கொண்டாள்!

காதலில் விழுந்ததையும், பின் பள்ளத்தில் விழுந்ததையும் சொல்கிறார்.

வாலி தமிழகத்தின் ஊர்ப்பெயர்களை வைத்து ஒரு பெண்ணை வர்ணிக்கிறார். மதுரையில் பறந்த மீன் கொடியை அவள் கண்ணில் பார்த்து சேரன் வில்லை புருவத்தில் பார்த்து புலிக்கொடியை அவள் பெண்மையில் பார்த்து என்று அலங்காரமான பாடல் ஒன்று.

காஞ்சித் தலைவன் கோவில் சிலை தான்
கண்மணியே உன் பொன்னுடலோ
குடந்தையில் பாயும் காவிரி அலை தான்
காதலியே உன் பூங்குழலோ
சேலத்தில் விளையும் மாங்கனிச் சுவைதான்
சேயிழையே உன் செவ்விதழோ?
தூத்துக் குடியின் முத்துக் குவியல்
திருமகளே உன் புன்னகையோ?

பாடல் முழுவதும் வரிகளின் முதலில் ஒரு ஊர்ப்பெயரை வைத்து அழகான கவிதை.

வைரமுத்துவும் பெண்ணை வர்ணிக்கவே ஊர்பெயரை வரிகளில் வைக்கிறார். ஒவ்வொரு ஊரிலிருந்தும் விசேஷமான பொருள் எடுத்து அந்த பெண்ண சிலை செய்ததாக கற்பனை தஞ்சாவூரு மண்ணெடுத்து என்ற பாடலில் வரும் வரிகள்,

கன்னம் செஞ்ச மண்ணு அது பொன்னூரு
ஒதடு செஞ்ச மண்ணு மட்டும் தேனூரு
நெத்தி செய்யும் மண்ணுக்கு சுத்தி சுத்தி வந்தேங்க நெலாவில மண்ணெடுத்து நெத்தி செஞ்சேன் பாருங்க
வாழையூத்து மண்ணெடுத்தேன் வயித்துக்கு - அட
கஞ்சனூரு மண்ணெடுத்தேன் இடுப்புக்கு

கண்ணதாசனின் காதல் தோல்வி வரிகள் ஒரு extreme என்றால் வாலியும் வைரமுத்துவும் சொல்லும் வர்ணனைகளும் மிகையானவை. எனக்கு அறிவுமதி எழு-திய அழகூரில் பூத்தவளே பாடல் வரிகள் இயல்பாக இருப்பதாய் தோன்றுகிறது.

அழகூரில் பூத்தவளே
எனை அடியோடு சாய்த்தவளே
மழையூரின் சாரலிலே
எனை மார்போடு சேர்த்தவளே
உன்னை அள்ளித் தானே
உயிர் நூலில் கோர்ப்பேன்
உயிர் நூலில் கோர்த்து
உதிராமல் காப்பேன்

அவள் பிறந்த ஊர் எதுவாக இருந்தாலும் அதுவே அழகான ஊர் என்பதில் ஒரு உணர்வுபூர்வமான நியாயம். அவள் சுருட்டிப் போட்ட முடி மோதிரமாகியது அவள் சோம்பலில் இவன் முறிந்து போனது - மிகை தான் என்றாலும் சுவாரஸ்யம்தான். "என்னை மறந்தாலும் உன்னை மறவாத நெஞ்சோடு நான் இருப்பேன்" என்று சொன்னவுடன் நெகிழ்ந்து "அன்பூரில் பூத்தவனே" என்கிறாள். அழகு.

# செக்கோயா மரம்!



மிகச் சிறிய விதை ஒன்றில்தான் பூமியிலேயே மிகப் பெரிய மரம் வளர்ந்திருக்கின்றது என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

கலி:.போர்னியாவில் காணப்படும் செக்கோயா என்ற மரம் நிலத்திலிருந்து 100 மீற்றர் உயரத்துக்கும் அதி-கமாக வளர்ந்து நிற்கும். தரையிலிருந்து ஒன்றரை மீற்றர் உயரத்தில் இந்த மரத்தின் அடிப்பாகத்தின் விட்டம் 11 மீற்றர் கூட இருக்குமாம்.

இந்த ஒரு மரத்தை வைத்து ஆறு அறைகள் கொண்ட ஐம்பது வீடுகளைக் கட்ட முடியுமாம். இதன் மரப்பட்டை மட்டும் 60 செ.மீ. இதிலுள்ள டேனின் என்ற பொருள் பூச்சிகளை அண்டவிடாமல் செய்கின்றது. இம்மரத்தின் வேர்கள் 3 அல்லது 4 ஏக்கர் அளவுக்கு பரவியிருக்குமாம்.

ஒரு செக்கோயா மரம் 3000 ஆண்டுகள் வரை உயிர் வாழும் என்று கணக்கிட்டுள்ளார்கள்.

இம்மரத்தின் விதைகள் ஒவ்வொன்றும் ஒரு குண்டூசியின் தலை அளவில்தான் இருக்கும். இந்த விதைகளுக்கு சிறிய இறக்கைகள்கூட உண்டு.

# அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்...

– மணிமேகலா –

ஊர்க் கோயில் திருவிழாக் கொண்டாட்டங்களின் போது, குடும்பம் ஒன்றுகூடும் காலம் அதுதான். அத்திருவிழாக் காலங்களில் வீட்டிலும் திருவிழாத்தான். மாலை ஆறுமணி அளவில் சமையலறை பக்கமாய் மிக அமளியாய் இருக்கும். தென்னந்தும்பும் சாம்பலும் கொண்டு விளக்கப்பட்ட வெண்கலப் பானையில் காய்ந்த தென்னம் மட்டைகளாலும் பன்னாடை மற்றும் பனை மட்டைகளாலும் எரிக்கப்படும் அடுப்பில் மருமக்களும் மச்சாள்மார்களுமாகக் குழல் புட்டு:. நீத்துப் பெட்டியில் பிட்டு அவிக்கும் வாசம் தூள் கிளப்பும்.

பிட்டும் தேங்காய்ப் பூவும் தரும் வாசம் என்பதையும் தாண்டி பனை ஓலையால் கூம்பு வடிவில் தயாரிக்கப்படும் நீத்துப் பெட்டிக்கும் மூங்கில் குழாயினால் செய்து பருத்தித் துணி கொண்டு சுற்றப்பட்ட பிட்டுக் குழலினால் அவிக்கப்படும் பிட்டு மீண்டும் பனை ஓலைப் பெட்டிக்குள் கொட்டப்படும். பிட்டின் வாசமும் தேங்காய்ப்பூ வாசமும், பனை ஓலையின் வாசமும் சேர்ந்து ஒரு வித வாசம் அந்த வீடு பூரா பரவும்.

அதன் வாசமும் சுவையும் தனி. அதற்கு நல்லெண்ணையில் பொரித்த கத்தரிக்காய்ப் பொரியல் மத்தியானத்துக் குழம்பு அல்லது முட்டைப் பொரியல் என்று இப்படி ஏதேனும் இருந்தால் அது இன்னும் விஷேசம்.


இப்போது வாயு, மின்சார அடுப்புகளும் உலோகத்தாலான ஸ்ரீமரும் பாவனைக்கு வந்துவிட்டன. பிட்டு அவிப்பது வேலை மினைக்கேடு ஆகி ரெடிமேட் சாப்பாடுகள் வீட்டு மேசைக்கு வர ஆரம்பித்துவிட்டன.



அடுப்பு! பறண் மீது அமைந்திருக்கும். பறணுக்கு கீழே விறகும் தென்னம் மட்டைகளும் இருக்கும். போர் காலங்களில் அவசர கால பங்கராகவும் அது பயன்பட்டது. கொங்கிறீற்றால் அமைக்கப்பட்டது அதற்குக்காரணமாக இருக்கலாம். சூட்டடுப்பு என்று ஒன்று பெரிய அடுப்புக்கு அருகாக இருக்கும். அதற்கு விறகு வைக்கத் தேவை இல்லை. பெரிய அடுப்பின் பிள்ளை அடுப்பு மாதிரி அது. பெரிய அடுப்பில் இருந்து வரும் நெருப்பும் சூடும் அதற்குப் போதும்.



நீத்துப் பெட்டி, மற்றும் இடியப்ப உரல். பனை ஓலையில் செய்த நீத்துப்பெட்டிதான் திறம். இதற்குள் அவிக்கும் பிட்டுக்கு தனி வாசம். தனி மகத்துவம்! ஊர்ப் பாசையில சொல்லுறதெண்டா. "சொல்லி வேலையில்லை". அவிந்தபின் இறக்கி தட்டில் நீத்துப்பெட்டியைக் கவிழ்த்துக் கொட்டும்போது புட்டு கூம்பு வடிவில் நிற்கும். இதை ஒரு "வியளை" புட்டு என்பர்.



சுளகும் இடியப்பத் தட்டும்! சுளகு அரிசியில் இருந்து உமியை நெல்லை வேறாக்க, தானியங்களில் இருந்து குறுணிகளை, மேலும் கஞ்சல்களை வேறாக்க என்று பலதுக்கும் பயன் படுவது. அதனை பயன் படுத்துவதிலும் ஒரு லாவகம் இருக்கும். "தனக்குத் தனக்கெண்டா சுளகு படக்கு படக்கெண்டு அடிக்குமாம்" என்று ஒரு பழமொழி இருக்கு.

இடியப்பத் தட்டு மூங்கில் நார்களினால் பின்னப்படுபவை. வெள்ளை நிறப் பிளாஸ்டிக்கிலும் பின்னர் வந்தன. கதிரைகளும் இந்நார்களினால் பின்னப் படுபவையே!



திருவலகை! இது தான் சமையலறை நாயகன். இல்லை, நாயகி. இதில இருந்து முழுத் தேங்காயும் துருவி எடுத்து முதல் பால், இரண்டாம் பால், கப்பிப் பால் என்று பிறிம்பாக எடுத்து வைத்து விட்டால் ஊர் சமையலில் பாதி வேலை முடிந்ததற்குச் சமன். இப்ப ரின்னில் பக்கற்றில் எல்லாம் தேங்காய்ப் பால் வருகிறது. குறைந்த விலையில் கிடைக்கவும் செய்கிறது. என்றாலும் தேங்காய் துருவிப் பாலைப் பிழிஞ்சு சமைக்கிற மாதிரி வராது.


# 20 வினாடிகளில் செல்போனை சார்ஜ் செய்யலாம்!



20 வினாடிகளில் கையடக்கத் தொலைபேசிக்கு சார்ஜ் செய்யக்கூடிய கருவியை அமெரிக்க மாணவி கண்டுபிடித்துள்ளார். இதன் மூலம் மிகப் பெரிய வர்த்தக நிறுவனமான கூகுளின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துள்ளார். இந்தச் சாதனையைப் புரிந்துள்ள 18 வயதான ஈஹா கரே, இதற்காக இண்டெல் அறக்கட்டளை அளித்த இளம் விஞ்ஞானி விருதினையும் பெற்றுள்ளார். இந்தக் கருவியை மேம்படுத்த அமெரிக்க அரசு இவருக்கு 50,000 டொலர் நிதி உதவியும் அளித்துள்ளது.

தன்னுடைய செல்போனின் பற்றரி அடிக்கடி சார்ஜ் செய்யும் நிலை ஏற்பட்டதே இந்தக் கண்டுபிடிப்பிற்கு தூண்டுகோலாக இருந்தது என்று ஈஹா குறிப்பிட்டுள்ளார். சாதாரணமாக 1000 முறை பயன்படுத்தக் கூடிய பற்றரிகளைப் போல் இல்லாமல், தன்னுடைய கருவியை 10,000 முறை சார்ஜ் செய்யப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கின்றார். இந்தப் பற்றரி சிறு மின்விளக்குகளில் பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாகவும், செல்போன் போன்ற மின்சாதனப் பொருட்களில் இவற்றின் பயன்பாடு வெற்றிகரமானதாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

# குறைந்த விலையில் லப்டொப்!




முதற்தர கணனி வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான Asus நிறுவனமானது கணனி வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்பானதாகக் கருதப்படும் Ubuntu இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட மடிக்கணனிகளை அறிமுகப்படுத்துகின்றது. Asus 1015E எனும் பெயர் கொண்ட இக்கணனிகள் 1.1 புர்ண வேகத்தில் செயலாற்றவல்ல Intel Celeron dual-core processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 10.1 அங்குல அளவு மற்றும் 1366 x 768 Pixel Resolution உடைய திரையினைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

7.5 மணித்தியாலங்கள் வரை தொடர்ச்சியாக மின்னை வழங்கக் கூடிய மின்கலமும், 0.3 x 7 x 1.4 அங்குலம் என்ற அளவுப்பரிமாணமும், 2.8 பவுண்ட் எடையும் கொண்ட இச்சாதனத்தின் விலையானது 215 டொலர்கள் மட்டுமே.




# நீரிழிவு நோயாளிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்!



நீரிழிவு நோயாளிகள் இனி இரத்தப் பரிசோதனை செய்ய உடலில் ஊசியை குத்திப் பார்க்கத் தேவையில்லை. ஆம்! இனி கையில் ஊசியை குத்த அவசியமில்லை, ToucHb என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கருவியை கையில் வைத்துக்கொண்டாலே போதும் உங்கள் இரத்த குரூப், இரத்தத்தின் வெல்ல அளவு ஆகியவற்றை துல்லியமாக அளக்கலாம். இது மருத்துவ உலகில் ஓர் மைல்கல் என்றே கூறலாம். தற்போது விற்பனைக்கு வர உள்ளது.

இந்த ToucHb இரத்தத்தில் உள்ள எந்த வித நோயையும் கண்டுபிடிக்கவல்லது. ToucHb இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு, Hb அளவு ஆகியவற்றை மிக துல்லியமாக அளவிடக்கூடியது.

# Galaxy Mega 6.3 ஸ்மார்ட் செல்பேசி!



சம்சுங் நிறுவனமானது Samsung Galaxy Mega 6.3 எனும் அதிநவீன ஸ்மார்ட் செல்பேசியினை எதிர்வரும் ஜூலை மாதம் அறிமுகம் செய்கின்றது. 6.3 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution cila HD தொடுதிரையினைக் கொண்ட செல்பேசியானது 1.7GHz வேகத்தில் செயலாற்றவல்ல Processor. பிரதான நினைவகமாக 1.5GB RAM போன்றவற்றினையும் சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவையும் கொண்டுள்ளதுடன் இதனை microSD கார்ட்களின் உதவியுடன் 64GB வரை அதிகரிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது.

கூகுளின் Android 4.2 Jelly Been இயங்குதளத்தினை அடிப்படையா கக் கொண்டு வடிவமைக்கப் பட்ட இச்செல்பேசியில் 8 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமரா மற்றும் 1.9 மெகாபிக்சல்கள் உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் காணப்படுகின்றன. அறிமுக விலை 459.99 யூரோக்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேடுதலில் சில கூகுள் வழிகள்!

கூகுள் தேடுதளம் தரும் நவீன வசதிகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அவ்வளவாகப் பலரும் அறியாத அல்லது அடிக்கடி பயன்படுத்தாத சில தேடுதல் வழிகளும், அவற்றை எதற்காகப் பயன்படுத்தலாம் என்பது குறித்தும் இங்கு காணலாம்.

1.கூகுள் குரூப்ஸ் தளங்களிலிருந்து வரையறைகளுடன் தேடல்

**author:** குறிப்பிட்ட ஒருவரிடமிருந்து ஒரு மின் அஞ்சல் குழுவில் உள்ள தகவல்கள் அடங்கிய செய்திகளைப் பெற – fried chicken author:lakshmi author:manjula (லஷ்மி மஞ்சுளா என்பவர் எழுதிய fried chicken குறித்த கட்டுரைகள்)

**group:** குறிப்பிட்ட நியூஸ் குரூப்பில் இருந்து குரூப் மெசேஜ் பெற – kalki novels group:tamilnovels.books (கல்கியின் நாவல்கள் குறித்து tamilnovels.books என்ற குரூப்பில் இருந்து தகவல்கள் பெற)

**insubject:** சப்ஜெக்ட் லைன் கட்டத்தில் குறிப்பிட்ட பொருள் குறித்து எழுதப்பட்ட அஞ்சல் செய்திகளைப் பெற - insubject: "Jaffna" (சப்ஜெக்ட் கட்டத்தில் Jaffna என்ற சொல் கொண்ட மின் அஞ்சல்களைப் பெற)

**location:** குறிப்பிட்ட இடம் சார்ந்த தளங்களிலிருந்து செய்தி மற்றும் தகவல்கள் பெற - சேர்ச் பொக்ஸில் Obama location: (ஒபாமா குறித்த செய்தி தகவல்களைப் பெற)

**source:** குறிப்பிட்ட மூல தரவுகளிலிருந்து, தேடும் தகவல் குறித்த செய்திகளைப் பெற

2. இணையத் தளங்களைப் பற்றிய தேடல்கள்:

cache: கூகுள் ஏற்கனவே குறிப்பிட்ட இணையதளத்திலிருந்து சேமித்து வைத்த தகவல்களைப் பெற cache:www.bbc.co.uk பிபிசி தளம் சார்ந்து கூகுள் சேர்த்து வைத்த செய்திகளைப் பெற

**info:** குறிப்பிட்ட இணைய தளப் பக்கம் குறித்த தகவல்களைப் பெற – info: www.bbc.co.uk பிபிசி இணையத்தளம் குறித்த தகவல்களைப் பெற.

**related:** குறிப்பிட்ட இணையத் தளம் போன்ற அல்லது சார்புள்ள மற்ற இணையத்தளங்கள் குறித்த தகவல்களைப் பெற - related: www.bbc.co.uk பிபிசி இணையத் தளம் போன்ற அல்லது அதனுடன் தொடர்புள்ள மற்ற இணையத் தளங்கள் குறித்த தகவல்களைப் பெற.

3. சில அடிப்படை தேடல்களின் எடுத்துக் காட்டுகள்:

முதலில் தேடல் சொற்களும், அடுத்து அவை எந்த பக்கங்களைக் காட்டும் எனவும் தரப்பட்டுள்ளது.

**malware and taiwan :** malware மற்றும் taiwan ஆகிய சொற்கள் கொண்ட இணையப் பக்கங்கள்.

**recycled plastic OR iron:** மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் அல்லது இரும்பு குறித்த தகவல்கள்

"I have a dream" மிகச் சரியாக ஐ have a dream என டெக்ஸ்ட் கொண்ட இணையப் பக்கங்களின் பட்டியல்.


**salsa dance :** salsa என்ற சொல், ஆனால், அவற்றில் dance என்ற சொல் இல்லாத இணையப் பக்கங்கள்.

**castle ~glossary :** castle என்ற சொல் உள்ள சொல் களஞ்சியம், அகராதி, சொல் கூறு மற்றும் பிற தகவல்கள் உள்ள இணையப் பக்கம் அறிய.

**define:imbroglio:** இணையப் பக்கங்களிலிருந்து imbroglio என்ற சொல் குறித்த விளக்கங்கள்.

மேலே காட்டியுள்ளது போல இன்னும் சிலவகை தேடல் வகைகளும் உள்ளன. அவற்றைப் பின்னர் பார்க்கலாம்.

# Hard Disk நிலையை அறிவதற்கு உதவும் மென்பொருள்!



நம் கணனியின் ஹார்ட் ட்ரைவில், பைலை சேவ் செய்கையில், அல்லது புதிய புரோகிராம் ஒன்றை இன்ஸ்டோல் செய்கையில், டிஸ்க்கில் உள்ள ட்ரைவில் இடம் பற்றாக்குறையாக உள்ளது என்ற செய்தி நமக்கு அச்சத்தைத் தரலாம். அப்படி என்ன நான், ஹார்ட் டிஸ்க்கின் அதிக இடத்தைப் பயன்படுத்தி விட்டேன் என ஆச்சரியப்படலாம். இந்த நேரத்தில் உதவத்தான் WinDirStat என்ற புரோகிராம் இணையத்தில் இலவசமாகக் கிடைக்கிறது.

இந்த புரோகிராமினைக் கணனியில் இன்ஸ்டோல் செய்வது மிக எளிது. இன்ஸ்டோல் செய்து முதல் முறையாக இயக்கப்படுகையில், கணனியில் உள்ள ட்ரைவ்கள் அனைத்தையும் காட்டும். ஒவ்வொன்றாகவோ அல்லது மொத்தமாகவோ தேர்ந்தெடுத்து, இடம் ஏற்கனவே எடுக்கப்பட்டது குறித்தும், காலியாக இருப்பது குறித்தும் அதனை ஆய்வு மேற்கொள்ளச் செய்திடலாம். ஆய்வு முடிந்தவுடன் எத்தகைய பைல்கள் உங்களுடைய ஹார்ட் டிஸ்க்கில் அதிக இடம் எடுத்து அமர்ந்துள்ளன என்று வண்ணங்களைக் கொண்டு வேறுபடுத்திக் காட்டப்படும். இந்த இடத்திலிருந்தே உங்கள் ஹார்ட் ட்ரைவில் உள்ள பைல்களை நீக்கலாம். அவற்றின் இடம் குறித்து நிர்வகிக்கலாம். இதனைப் பெற http://windirstat.info/download.html என்ற முகவரியில் உள்ள தளம் செல்லவும்.

# கிளிநொச்சி - உருத்திரபுரம் பேருந்துச் சேவைகள் அதிகரிப்பு

## பல்வேறு கிராம மக்கள் மகிழ்ச்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து உருத்திரபுரம் செல்வதற்கான அரச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

காலையில் இருந்து மாலைவரை சில மணி நேர இடைவெளிகளில் இந்தப் பேருந்துச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

உருத்திரபுரம், சூழாவடி, எல்லுக்காடு, 10 ஆம் வாய்க்கால், 8ஆம் வாய்க்கால், 7ஆம் வாய்க்கால், ஜெயந்திநகர், திருநகர், கணேசபுரம், கனகபுரம் ஆகிய கிராம மக்கள் இதனால் பெரும் பயனடைந்துள்ளனர்.



கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் ஆரம்பிக்கப்கப்படும் இச்சேவை ஏ-9 வீதியூடாக வைத்திய சாலை சென்று மீளவும், டிப்போச்சந்தி ஊடாக நீதிமன்றம், அரசாங்க அதிபர் அலுவலகம், பிரதேச சபை அலுவலகம் காக்காகடைச்சந்தி, பழைய வைத்தியசாலையடி, கந்தசாமிகோவிலடி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கொமர்சல் வங்கி, ஹற்றன்நஷனல்வங்கி, சம்பத்வங்கி மற்றும் பல்வேறு வங்கிகள், நிறுவனங்கள் அமைந்துள்ள கரடிப்போக்கு சந்திவரை சென்று அங்கு கிளிநொச்சி புனித திரோச பெண்கள் கல்லூரியுடன் திரும்பி மீளவும் கிளிநொச்சி பிரதேச சபையடிக்கு வந்து திருநகர் வீதியூடாக ஜெயந்திநகர்சென்று உருத்திரபுரத்தை அடைகின்றது.

மீளவும் இதே வழிகளூடாகவே வந்து டிப்போச்சந்தியை வந்தடையும்.

கிளிநொச்சி டிப்போச்சந்திப்பகுதியில் தற்போது நவீன சந்தை அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி மக்கள் இச்சந்தைக்கு கொண்டுவந்து தங்களுடைய பொருட்களை விற்பனை செய்வதுடன் தமக்குரிய பொருட்களையும் கொள்வனவு செய்து வருகின்றனர்.

விரிவாக்கப்பட்ட இந்தச்சேவையினால் இப்பகுதி மக்கள் தனியார், மற்றும் அரச போக்குவரத்துச்சேவையினருக்கு நன்றிகளைத்தெரிவித்துள்ளனர். (21)

# அந்த மரணம் மர்மமானது அல்ல; மருத்துவ அறிக்கை கூறுகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இளம்பெண் ஒருவர் திருச்சியில் மர்மமான முறையில் மரணமானதாக வெளியாகியசெய்தி முற்றிலும் தவறானது என்று இப்போது தெரியவந்துள்ளது.

கடந்தபெப்ரவரி மாதம் இடம்பெற்ற இந்த மரணம் தொடர்பாக நடைபெற்ற விசாரணைகளில் இருந்தும், பிரேத பரிசோதனை அறிக்கையில் இருந்தும் மேற்படி செய்தி தவறானது என்று தெரியவந்துள்ளது.

.வெளிநாட்டுச்செய்தி இணையத்தளங்கள் சில இச் செய்தியை பரபரப்புடன் வெளியிட்டிருந்தன. இந்த மரணத்துக்கான உண்மையான காரணத்தை உரியதரப்புக்களுடன் தொடர்பு கொண்டு உடனடியாக உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.



இதே செய்தியை எமது செய்திப்பக்கத்திலும் கடந்த 09.02.13ஆம் திகதி பிரசுரித்திருந்தோம்.

இந்த மரணத் துக்கான உண்மையான காரணம் காலதாமதமாகவே கிடைத்தது. ஏற்கனவே நாம் வெளியிட்ட செய்தியால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்ட மன உழைச்சலுக்காக நாமும் மனம் வருந்துதின்றோம்.

## அல்லைப்பிட்டி கிராமத்தின் உள்ளக வீதிகள் புனரமைக்கப்படுமா?

(அரியாலை)

அல்லைப்பிட்டி கிராமத்தின் உட்புறவீதிகள் நீண்டகாலமாக சீர்திருத்தப்படாது காணப்படுவதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இப்பிரதேசத்திலுள்ள உள்ளக வீதிகள் பல குண்டும் குழியுமாக காணப்படும் நிலையில் இவ்வீதியால் நாளாந்தம் பல எண்ணிக்கையான மக்கள் தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை அல்லைப்பிட்டி சந்தியில் இருந்து தெற்கு நோக்கிச செல்லும் அந்தோணியார் கோவிலுக்குச் செல்லும் வீதியும், பராசக்தி வித்தியாலயத்திலிருந்து மேற்குப் புறமாக மண்கும்பான் வரையான வீதியும், தெற்குப் புறமாக உள்ள கடற்கரை வீதியும் நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருப்பதாக தெரிவிக்கும் மக்கள் சம்பந்தப்படவர்கள் உள்ளக வீதிகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (23)

## பொங்கல்விழா

மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்தினதும், மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தினதும் வைகாசிப் பொங்கல் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (01)



காரைநகர் பாலாவோடை குறுஞ்சா குறிச்சி அம்மன் ஆலய தேர்த்திருவிழா வைசாசி விசாகமான நேற்று நடைபெற்ற போது அம்பாள் அலங்கரிக்கப்பட்டு தேரில் ஆரோகணிப்பதற்காக எழுத்தருளி வருவதையும், பக்தர்கள் சித்திரத் தேர் வடம் பிடித்து இழுத்துச் செல்ல அம்பாள் பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருப்பதையும் காணலாம். (50)

# பதிவிறக்கப் பெட்டகம்

மதுவுக்கும் நம்முடைய கலாசார வெறுமைக்கும் ஒரு தொடர்பு உள்ளது. வாசிப்பு, எழுத்து, இசை, நடனம், பேச்சு போன்ற கலாசார நடவழக்கைகள் பிறரோடு உறவாட மட்டுமல்ல நம்மோடு தொடர்புறுத்தவும் சொல்லித் தருகின்றன. சும்மா ஒரு நாற்காலியில் அல்லது குட்டைச்சுவரில் அமர்ந்து இருக்கும்போதை விட ஒரு நடனம் ஆடும் போது உங்களை நீங்கள் புதிதாக புத்துணர்வுடன் புத்தழகுடன் பார்க்க முடியும். ஆனால் கலாசார கொண்டாட்டங்கள் இல்லாத ஒரு சமூகத்தில், வேலையையும், குடும்ப ரீதியான சடங்குகளையும் தவிர வேறெந்த பற்றுதலும் இல்லாத சமூகத்தில் மனிதன் தனக்குள் ஒரு பெரும் ஓட்டையை பார்க்கிறான். குடி அவனுக்கு ஒரு மாற்று உலகை திறந்து விடுகிறது. அது போலியானது என்றாலும் அவனுக்கு வேறு வழியில்லை.

நம்முடைய பண்பாடு நம்மை நாமே ரசிக்க சொல்லித் தரவில்லை. விளைவாக ஏதாவது ஒரு கூட்டத்தில் சதா இருக்க விரும்புகிறோம். அல்லாவிட்டால் பதற்றமாகிறோம். இன்று சமூகமாக்கலுக்கு வேறு இடமோ சூழலோ இல்லாத நிலையில் மது தான் அதற்கான ஒரே முகாந்திரம். பண்பாட்டு வறுமையின் இன்னொரு சிக்கல் சலிப்பு. பலரும் சலிப்பை கடக்கத்தான் குடிக்கிறார்கள். களைப்பு, வலி, வாழ்வின் நிலையின்மை குறித்த கவலைகள் என மேலும் பல காரணங்கள் இருக்கின்றன. மரபியலும் ஒரு வலுவான காரணி என தோன்றுகிறது.

நாம் குடியினால் அழிகிற குடும்பங்கள் பற்றி பேசி வந்திருக்கிறோம். குடியை நோக்கி போக நேர்கிற தனிமனிதர்கள் பற்றியும் இனி தீவிரமாக யோசிக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருக்கத் தான் குடிக்கிறார்கள். ஆனால் குடித்த பின் ஏதோ ஒன்று குறைவதாக தோன்றுகிறது. அதை சரி செய்ய மீண்டும் குடிக்கிறார்கள். இப்படி போகிறது வாழ்க்கை!

**– அபிலாஷ் சந்திரன்**

பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஜோனன் டிக்கன்ஸ் என்பவர் ஒரு புத்தகத்தை தேட பல ஆண்டுகள் அலைந்தாராம். பதினாறாயிரம் கிலோமீற்றர்கள் அலைந்து 'ப்ரோக்கன் திஹெல்' என்கிற புத்தகத்தை கண்டுபிடித்தாராம். பிரெஞ்ச் பழங்குடி இனத்தவர்களின் புரட்சி பற்றிய ஏதோ புரட்சிகர புத்தகமாம். அதை படித்தே தீரவேண்டும் என்று வெறியோடு அலைந்து திரிந்து 12 ஆண்டுகள் கழித்து கண்டுபிடித்தாராம் ஜோனன் டிக்கன்ஸ்.

புத்தகம் கைக்கு கிடைக்கும்போது குடும்பம், சம்பாத்தியம், சந்தோஷம் எல்லாவற்றையும் தொலைத்திருந்தார். ஆனால் அந்தப் புத்தகப்பிரதியை வாங்கிய கணம், "இந்த நிமிடம் உலகிலேயே மகிழ்ச்சியான மனிதன் நான் தான். இந்த மகத்தான பிரதியை அச்சாக்கி... வரும் தலைமுறைகளுக்குத் தந்துவிட்டு, நான் செத்துப்போய் விட்டால், அதைவிடச் சந்தோஷம் வேறு என்ன இருக்க முடியும்" என்ற டிக்கன்ஸ், அதை உடனே செய்தார்!

**– அதிஷா**

பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடிப் புறப்பட்டு இயலாமைகளுக்கான காரணங்களைக் கண்டடைந்து முடங்கியவனாக என்னை இனங்காண்கிறேன். ஏழு மலை தாண்டி, ஏழு கடல் தாண்டி இருக்கும் கோட்டை ஒன்றிற்குள் நாகங்கள் காவல் காக்கும் அறைக்குள் ஒரு குமிழி இருக்கிறது. அதைத் திருகினால் உலகில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று தீர்மானமாக எனக்குப் புலப்பட்டால் மலைகளையும் கடல்களையும் தாண்டப் போய்விடுவேன். எமக்குத் தொழில் கவிதை அல்ல.

**– தனது கவிதைத்தொகுப்பு முன்னுரையில் மகாதேவன்**

எனது அறிவு வளர்ச்சி முழுவதுமே கருத்துப் போராட்டங்களின் வாயிலாகவே உருவாகியுள்ளது. எனவே எதனுடனும் சார்பு கொள்ளாத வகையில் சிந்திப்பதோ, படிப்பை படிப்பிற்காக மட்டுமே மேற்கொள்ளுவதோ எனக்குச் சாத்தியமில்லை. அறிவுரீதியான தூண்டுதலை நான் பெறுவது விவாதத்தின் மூலமும் இயக்கவியல் ரீதியான சிந்தனையின் மூலமும்தான். இருட்டில் கற்களைத் தூக்கி எறிவது எனக்குப் பிடிக்காத விஷயம். என்னுடன் விவாதிக்கக் கூடிய நபர் – திட்டவட்டமான எதிராளி – எனக்குத் தேவை.

**– அன்டோனியோ கிராம்ஷி**

# மேற்குலக விழுமியங்களின் ஊடுருவல்
# தெற்கில் மேற்கிளம்பும் புதிய சர்ச்சை

(கொழும்பு)

மேற்குலக விழுமியங்களை நாட்டுக்குள் பரப்பும் முகமூடிகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியது யார்? என்று தெற்கில் புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது.

வேண்டுமென்றே திட்டமிட்ட முறையில் வெசாக் கொண்டாட்டத்தின் போது "சோம்பிஸ்" முகமூடிகளை இறக்குமதி செய்தது யார்? என்று அரசாங்கம் விசாரணைகளை நடத்தவேண்டும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார். வெசாக் புத்த தர்மத்தின் உண்மையை உணர்த்திநிற்கின்ற நிலையில், இந்தக் காலகட்டத்தில் மிக பயங்கரமான முகமூடிகளை அணிவதன் நோக்கம் என்ன? என்றும் வினவினார்.

"சோம்பிஸ்" முகமூடிகளை தங்களுடைய பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுக்கவேண்டாம் என்றும் பெற்றோர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். அது சிறுவர்களின் மனநிலையை மாற்றிவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்குல நாடுகளில் ஒக்ரோபர் 31ஆம் திகதி கொண்டாடப்படும் "ஆலோவின்" கொண்டாட்டத்தின் போது;

மற்றவர்களை பயமுறுத்தி விளையாடுவது, பலவிதமான மாறுவேடங்கள் அணிவது, மாறுவேட விருந்துகளில் கலந்து கொள்வது, சொக்கப்பனை கொளுத்துவது, பயமுறுத்தும் கதைகளைப் படிப்பது, பயமுறுத்தும் படங்களைப் பார்ப்பது ஆகியவை இந்தக் கொண்டாட்ட நாளில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மௌலவி வீட்டில் திருட்டு; பொலிஸ் வேட்டை தீவிரம்

(கொழும்பு)

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள மீறாவோடையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்றின்போது பதினாறு பவுண் தங்க நகைகளும் எழுபத்தையாயிரம் ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீறாவோடை எல்லை வீதியைச் சேர்ந்த முஹம்மது முஹைதீன் முஹம்மது ஹாறூன் மௌலவி (வயது 40) என்பவரின் வீட்டிலேயே இந்த திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். ஜும்மாப் பிரசங்கம் மேற்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தான் வீட்டைப் பூட்டி விட்டு குடும்பத்தாருடன் காத்தான்குடிக்குச் சென்றிருந்ததாகவும் இரவு 10 மணியளவில் திரும்பி வந்து வீட்டைப் பார்த்தபோது ஜன்னல்கள் உடைக்கப்பட்டு வீட்டிலிருந்த நகைகளும் பணமும் திருடப்பட்டிருந்ததாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஏனைய நபர்களைக் கைது செய்யும் முயற்சியில் தாம் ஈடுபட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்வியியற் கல்லூரிக்கு மாணவர் அனுமதி ஆரம்பம்

(கொழும்பு)

பத்தனை - ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கான 2013ஆம் ஆண்டுக்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இந்த மாதம் 30ஆம், 31ஆம் மற்றும் ஜூன் மாதம் முதலாம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற்கல்லூரியில் இந்த நேர்முகத் தெரிவுகள் இடம்பெறும் என்று கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற மாணவர்களே அனுமதிக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைகளுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி தமிழ்மொழி மூல பாடநெறிகளான தமிழ், ஆரம்பக்கல்வி, கணிதம், சமூகக்கல்வி, விஞ்ஞானம், கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் ஆகியனவற்றுக்காகவும். சிங்கள மொழிமூல பாட நெறிகளான சிங்களம், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி ஆகியனவற்றுக்கான நேர்முகத் தெரிவு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஆங்கில மொழிமூலம் இடம்பெறும் தகவல் தொழினுட்ப பாடத்திற்கான நேர்முகப்பரீட்சைகள் அதற்குரிய போட்டிப் பரீட்சைக்குப் பின்னரே இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருடம் 165 தமிழ் மொழிமூல மாணவர்களும், 55 சிங்கள மொழிமூல மாணவர்களும் 20ஆங்கில மொழிமூல பாடநெறிக்காகவும் மொத்தம் 220 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பீடாதிபதி குறிப்பிட்டார்.

# பெற்றுக்கொண்ட சமாதானத்தை பாதுகாக்க ஒற்றுமை அவசியம்
## வலியுறுத்துகிறார் யாழ்.தளபதி

(கொழும்பு)

பெற்றுக்கொண்ட சமாதானத்தை ஒற்றுமையின் மூலமே பாதுகாக்க முடியுமென யாழ். மாவட்ட தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

வெசாக் தினத்தையொட்டி பாதுகாப்பு படைகளின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடைபெற்ற பசு மாடுகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதி, மத, இன பேதங்கள் இன்றி வாழவேண்டும் என்று புத்தபெருமான் போதித்திருக்கின்றார். அந்த போதனைகளுக்கு ஏற்ப நாம் எல்லோரும் தமிழ், சிங்கள இன வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இந்த நாட்டில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறந்த ஒரு சமாதானம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த சமாதானத்தை பாதுகாப்பதற்கு நாங்கள் ஒற்றுமையை உருவாக்கவேண்டும். அந்த ஒற்றுமையின் ஊடாகவே வெற்றிகொள்ளப்பட்ட சமாதானத்தை நிலைநாட்ட முடியும்.

இந்த விடயத்தில் ஊடகங்களும் தேவையற்ற உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங் காமல் செயற்படவேண்டும்.

இன்று உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பசுக்கள் மூலம் உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பிள்ளைகளின் போசாக்கான வாழ்க்கையை நீங்கள் மேம்படுத்திக்கொள்ளவேண்டும். சிலர் பரப்பி வரும் பொய்யான பரப்புரைகளுக்கு மக்கள் ஒரு போதும் அஞ்சாமல் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் உரையாற்றும் போது, யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் அளப்பெரிய சேவைகளை மக்களுக்கு ஆற்றி வருகின்றனர். குறிப்பாக யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் மீள்குடியேற்றம் போன்ற விடயங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார் என்று குறிப்பிட்டார். (02)

# வறட்சியின் கோரப்பிடியில் குடாநாடு சிக்கிக்கொள்ளுமா?
## தவிர்த்துக்கொள்ள புதிய பொறிமுறை அவசியம்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் இப்போது வகைதொகையின்றி மரங்கள் அழிக்கப்படுகின்றன. அதேவேகத்தில் காடுகளும் அழிக்கப்பட்டு புதிய கட்டுமானங்களும், மனித குடியேற்றங்களும் இடம்பெறுகின்றன.

இதனால் சூழலியல் தாக்கத்திற்கு உட்பட்டு சூழல் வெப்பநிலை அதிகரிப்பதால் மனிதர்களுக்கு பஞ்சம், பசி, பட்டினி என்பனவும் ஏற்படுவதுடன், விவசாய அழிவு, பொருளாதார அழிவு என்பன அரங்கேறுகின்றன. இதை விட உச்சமான உரப்பாவனை, கிருமிநாசினி தாக்கம், மனித சக்திக்கு அப்பாற்பட்ட தொழில்நுட்ப அறிவு என விரிவடைந்து செல்கிறது.

இங்கு சூழலியற் தாக்கத்தினால் கடுமையான வறட்சியை 2010 முதல் வடக்கில் பல்வேறு மாவட்டங்களிலும் இதனை கடுமையாக உணரக்கூடியதாக இருப்பதுடன் 2012 இல் யாழ்.மாவட்ட தீவகம் உட்பட வலிகாமம் பகுதி மக்கள் மிக கடுமையாக வறட்டு நிலையினால் பாதிப்புக்குள்ளாகினர்.

இவ்வருடம் மிக கடுமையான வறட்சி நிலையை மக்கள் சந்திக்க நேரிடும் அதே நேரம் மக்களும், கால்நடைகளும் குடிதண்ணீருக்காக அல்லற்படவேண்டிய அவல நிலையும் ஏற்படும் என சமூகவியல் நிபுணர்கள், சூழலியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் தீவகத்தில் நிலவிய கடுமையான வறட்சி சூழலினால் வேலணை பிரதேச சபைக்குட்பட்ட கால்நடைகள் பல குடிதண்ணீரின்றி இறந்துள்ளன.

மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு உட்பட 14 கிராம அலுவலர் பிரிவுகள் வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வகையில் மிகவும் தாக்கத்திற்குள்ளாயின.

இந் நிலையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேலணை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் சபைத்தலைவர் சி.சிவராசா மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டதையடுத்து கூடுதல் நிதி வழங்கப்பட்டு மக்கள் காப்பாற்றப்பட்டனர்.


அதேநேரம் யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் அவர்கள் வேலணை பிரதேசசபை செயலாளரின் கோரிக்கையை ஏற்று குடிநீர் இன்றி கால்நடை இறப்பினைத் தடுக்க ரூபா 14 ஆயிரமும் அதற்கான தகரத் தொட்டிகளையும் வழங்கி உதவி இறுதி நேர கால்நடைகளின் இறப்பு கட்டுப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாரம்பரிய சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விசேட கூட்டத்தைக் கூட்டி அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பித்து 2012, 2013 காலப்பகுதிக்கு வறட்சி கால குடிதண்ணீரை கூடுதலாக வழங்குவதற்கு (யாழ்.மாவட்டம் முழுவதும்) விசேட அனுமதி பெற்றதுடன், கூடுதல் நிதியையும் பெற்றுக் கொடுத்தார்.

இதே நேரம் யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டமும் சுகாதாரத் திட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 164.04 மில்லியன் அமெரிக்கன் டொலர்களில் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வலி.மேற்கு சுழிபுரம், மூளாய் உட்பட தீவகம், வேலணை, புங்குடுதீவு மற்றும் யாழ்.மாநகரம் முழுவதும் 2017இல் வழங்கப்படவுள்ளது.

இதே நேரம் வலி.மேற்கு பிரதேச சபை நிதிப் பங்களிப்புடனும் வேள்ட்விஷன் (World Vision) நிதிப் பங்களிப்புடனும் வட்டு முதலி கோவிலடிப்பகுதியில் பாரிய நீர்த்தாங்கி (Over Head Water tank) அமைக்கப்பட்டு அப்பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபைகள் உள்ளூராட்சி சபைகள் மற்றும் குடிதண்ணீருடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கும் அதேவேளை சிக்கன பாவனை குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை உள்ளூராட்சி மாவட்ட மட்டத்தில் உள்ள சபைகள் மேற்கொண்டால் இவ்வருடம் கடுமையாக எதிர்கொள்ளப்படவுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தவிர்க்கலாம்.

-எல்.ஜி.ஏ



# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



## இந்துநாகரிகம்

பிரபல ஆசிரியர் :- மு.நித்தி

01) நாகரிகம் என்ற சொல் முதல் இடம்பெறும் தமிழ்நூல்
1) நன்னூல் 2) திருமந்திரம்
3) நற்றிணை 4) திருக்குறள்
5) மணிமேகலை

02) "பிராமணர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்" எனக் கூறும் பிராமணம்
1) ஐதரேயம் 2) சதபதம்
3) கோபதம் 4) கௌஷீதசி
5) தைத்திரியம்

03) இராமாயணத்தை இந்தியில் மொழி பெயர்த்தவர்
1) கம்பர் 2) வால்மீகி
3) ஒட்டக்கூத்தர் 4) துளசிதாஸர்
5) கபீர்தாஸர்

04) சோழர் காலத்தில் மும்முடிச்சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது
1) இந்தியா 2) கம்போடியா
3) கங்கைநாடு 4) இலங்கை
5) கடாரம்

05) வைணவ மரபில் "பரம பாகவதரர்கள்" எனத் தம்மை அழைத்துக் கொண்டோர்
1) மௌரியர் 2) சாளுக்கியர்
3) சோழர் 4) பல்லவர்
5) குப்தர்

06) பத்திரேஸ்வரம் எனும் ஆலயம் அமைந்துள்ள தென்கிழக்காசிய நாடு
1) கம்போடியா 2) ஜாவா
3) தாய்லாந்து 4) மலேசியா
5) சம்பா

07) திருவுருவங்களிலே இடத்துக்கிடம் நகர்த்தக்கூடியதாகக் கருதப்படுவது
1) சாலாசலம் 2) அசலம்
3) சலம் 4) திரிபங்கம்
5) அபங்கம்

08) பெரியகவி எனப்படும் குப்த மன்னன்
1) சந்திரகுப்தன் 2) சமுத்திரகுப்தன்
3) புதகுப்தன் 4) ஸ்கந்தகுப்தன்
5) குமாரகுப்தன்

09) திரிபுராந்தகரின் வடிவமாகக் கருதப்படுபவன்
1) துரோணர் 2) வீஷ்மர்
3) தருமர் 4) கிருபாச்சாரியார்
5) அசுமந்தாமன்

10) "எல்லாத் தேவரிலும் மேலான தேவர்" என இருக்குவேதம் கூறும் கடவுள
1) இந்திரன் 2) அக்கினி
3) வர்ணன் 4) உருத்திரன்
5) பிரஜாபதி

11) சிவாகமங்களில் சைவசித்தாந்த செம்பொருளை விளக்கும் பகுதி
1) சரியை 2) யோகம்
3) ஞானம் 4) கிரியை
5) பக்தி

12) அத்வைதம் என்ற சொல்லுக்கு சங்கரர் கொள்ளும் பொருள்
1) சிறுமை 2) மறுதலை
3) இன்மை 4) அன்மை
5) வேற்றுமை

13) முத்தியிலும் ஆன்மாக்கள் வேறுபடுமெனக் கூறிய வேதாந்தி
1) சங்கரர் 2) மத்துவர்
3) இராமானுஜர் 4) நீலகண்டர்
5) கௌடபாதர்

14) தர்மபூத ஞானத்தை வேதாந்தத்தின் மூலம் நிறுவியவர்
1) சங்கரர் 2) மத்துவர்
3) கௌடபாதர் 4) லபாதராயனார்
5) இராமானுஜர்

15) சைவசமயப் பிரிவிலே புராதனர் என அழைக்கப்படுவோர்
1) சைவர் 2) வீரசைவர்
3) காபாலிகர் 4) வைணவர்
5) சாக்தர்

16) நீதிநூல் வரிசையில் அஷ்டோத்திர நீதிநூல் எனச் சிறப்பிக்கப்படும் நூல்
1) கொன்றைவேந்தன் 2) ஆத்திசூடி
3) நாலடியார் 4) திருக்குறள்
5) பழமொழிநானூறு

17) பரீட்சித் மன்னன் மனிதரில் தெய்வம் போன்றவன் எனக்கூறும் நூல்
1) மனுதர்மசாஸ்திரம் 2) அர்த்தசாஸ்திரம்
3) திருக்குறள் 4) நாலடியார்
5) சுக்கிரநீதி

18) கல்வியில் கரையற்ற மாநகரம் என அப்பர் தேவாரத்தில் போற்றப்பட்ட தேசம்
1) மதுரை 2) அவந்தி
3) காசி 4) காஞ்சி
5) கன்னோசி

19) சந்திரகுப்தனின் நாணயத்தில் பொறிக்கப்பட்ட வடிவம்
1) சிவன் 2) முருகன்
3) விஷ்ணு 4) கணபதி
5) அம்மன்

20) திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர்
1) கபிலர் 2) நக்கீரர்
3) பரணர் 4) சேக்கிழார்
5) வசிட்டர்

21) யாழ். சைவபரிபாலனசபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1) 1930 2) 1902
3) 1922 4) 1955
5) 1988

22) சிற்பரத்தினத்தின் ஆசிரியர்
1) மெய்கண்டதேவர் 2) காளிதாசர்
3) குமரகுருபரர் 4) ஸ்ரீகுமாரர்
5) விஸ்வகர்மா

23) இராசி மண்டலம் எத்தனையாக வகுக்கப்பட்டுள்ளது.
1) 15 2) 36
3) 25 4) 12
5) 27

24) ஆறு அங்கங்களில் ஒன்றாக விளங்குவது
1) கணிதம் 2) மருத்துவம்
3) ஆகமம் 4) வேதாந்தம்
5) சோதிடம்

25) வட இந்தியாவில் இந்துக்கல்வி சிறப்புப்பெற்ற நகரம்
1) நாலந்தா 2) வாரணாசி
3) தட்சசீலம் 4) சிதம்பரம்
5) காஞ்சி

26) பகவத்கீதை குறிப்பிடும் ஞானயோகம் என்பது
1) அறிவுவழி 2) உழைப்புவழி
3) அன்புவழி 4) செல்லும்வழி
5) தன்னலம்கருதாவழி

27) வேதங்களில் மகவான் - சதக்கிருது முதலிய பெயர்களில் குறிக்கப்பட்ட தேவர்
1) அக்கினி 2) சரஸ்வதி
3) வருணன் 4) இந்திரன்
5) உருத்திரன்

28) புராதன இந்தியர்களின் மருத்துவம் பற்றிய இரு நூல்கள்
1) சரசம்கிதை, திரிகடுசம் 2) திருக்குறள், பிரமசூத்திரம்
3) மணிமேகலை, சிலப்பதிகாரம் 4) வாசனேயசங்கிதை, ஆகமம்
5) திரிகடுகம், வலாசியமான்மியம்

29) துவைத தத்துவம் சார் கருத்துக்களைக் கொண்ட தொகுதி
1) பரிணாமவாதம், ஜவகைப்பேதம்
2) அபச்சேதவாதம், விவர்த்தவாதம்
3) ஆன்மாக்கள் பல, ஜவகைப்பேதம்
4) ஆன்மாக்கள் பல, அபேதவாதம்
5) பரமேஸ்வரன்

30) "வித்தியாநீதன்" என்ற விருதுப் பெயர் கொண்ட பல்லவ மன்னன்
1) இராஜசிம்மன் 2) நந்திவர்மன்
3) மகேந்திரவர்மன் 4) இராஜேந்திரன்
5) பரமேஸ்வரன்

31) குமாரக்கடவுளின் மூர்த்தங்கள் பற்றிக் கூறும் நூல்.
1) சிவாகமம் 2) குமாரதந்திரம்
3) வைகாசனம் 4) காமிகம்
5) உருத்திராகமம்

32) திருக்கோட்டியூர் நம்பியைக் குருவாகக்கொண்ட வேதாந்தி
1) சங்கரர் 2) மத்துவர்
3) இராமானுஜர் 4) இராமானந்தர்
5) விவேகானந்தர்

33) மாயாகாரியங்கள் எனப்படுபவை எவை?
1) சிவம், சக்தி, விந்து, நாதம்
2) தனு, கரண, புவன, போகம்
3) காலம், கலை, நியதி, அராகம்
4) அறம், பொருள், இன்பம், வீடு
5) சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுட்சியம்

34) என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச்செல்வாயாக எனக்கூறும் உபநிடதம்
1) பிருகதாருண்ய உபநிடதம் 2) கேனோபநிடதம்
3) சாந்தோக்கிய உபநிடதம் 4) கடோபநிடதம்
5) தைத்திரீய உபநிடதம்

35) அத்வைதம் என்பதற்கு சைவசிந்தாந்தம் கொள்ளும் பொருள்
1) இன்மை 2) அன்மை
3) மறுதலை 4) சிறுமை
5) வேற்றுமை

36) ஸ்தபதி என அழைக்கப்படுபவன்
1) பஞ்சபுராணம் ஓதுபவர்
2) கோவில் கட்டடத்தை நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவர்
3) கோவிலைப் பரிபாலனம் செய்பவர்
4) கோவிலுக்கு நிதி வழங்குபவர்
5) கிரிஜைகள் மேற்கொள்பவர்

37) முருகன் மயிலை வாகனமாகக் கொண்டதால் வழங்கப்படும் பெயர்
1) கஜவாகனன் 2) தாரகாந்தன்
3) சிகிவாகனன் 4) கிரவுஞ்சபோதனன்
5) பிரம்மசாஸ்தா

38) விநாயகரின் திருவுருவில் எழுத்தாணி பிடித்தகரம் உணர்த்தும் தத்துவம்
1) அழித்தல் 2) காத்தல்
3) படைத்தல் 4) அருளல்
5) மறைத்தல்

39) இந்துக்களஞ்சியம் என்னும் தொகுதியை வெளியிடுவது
1) சமுக சேவைத்திணைக்களம்
2) இந்து சமயக் கலாசாரத் திணைக்களம்
3) சைவவித்தியாவிருத்திச் சங்கம்
4) அகில இலங்கை இந்துமா மன்றம்
5) இந்து சமயப் பேரவை

40) பாரத தாற்பரிய நிர்ணயம் என்ற நூலை எழுதிய வேதாந்தி
1) சங்கரர் 2) இராமானுஜர்
3) கோவிந்தபாதர் 4) மத்துவர்
5) கௌடபாதர்

41) ஈழத்தில் 4 ஆம் சிவாலயம் அமைந்துள்ள இடம்
1) மின்னேரியாதோப்பலாவி வீதி
2) ஜோத எல கால்வாய்
3) பொலநறுவைநகர்
4) காங்கேசன்துறை
5) பதவியா

42) ஆகம முறையிலும், பல்லவர்காலச் சிற்ப அமைப்பிலும் நியூயோர்க்கில் அமைந்த ஆலயம்
1) சிவன்கோயில்
2) வரதராஜ செல்வ விநாயகர் கோயில்
3) பெரியகணேசர் ஆலயம்
4) ஈஸ்ற்காம் ஸ்ரீ முருகன் கோவில்
5) மஹாவல்ல கணபதி கோவில்

43) இராமாயண இதிகாசத்தில் இலட்சுமணன் உயிர்காக்க ஆஞ்சநேயரால் கொண்டுவரப்பட்ட மலை
1) இமயமலை 2) சஞ்சீவிமலை
3) பொதியமலை 4) சுவாமிமலை
5) மருதமலை

44) குருகுலவாசமும், குருகுலக்கல்வியும் ஆரம்பமாகும் காலமாக கொள்ளப்படுவது
1) ஆவணிமாதபூர்வபட்சம் 2) ஆவணிச்சதுர்த்தி
3) தைப்பூசம் 4) மாசிமகம்
5) ஆடிமாத பூர்வபட்சம்

45) வள்ளி கூத்து, களநிலைக்கூத்து என்பன பற்றிக் கூறும் சங்க இலக்கியம்
1) நற்றினை 2) தொல்காப்பியம்
3) மலைபடுகடாம் 4) குறுந்தொகை
5) பரிபாடல்

46) சுமாத்திராவில் இந்து மன்னர்கள் குடியேறிய ஆதிவாசிகளை சீர்திருத்திய காலம்
1) கி.பி 10 2) கி.பி 12
3) கி.பி 6 4) கி.பி 21
5) கி.பி 03

47) குஷாணர் காலத்தில் உன்னதமான முறையிலே வளம்படுத்தப்பட்ட கலையாகக்காணப்பட்டது
1) குப்தர்கலை 2) காந்தாரக்கலை
3) கனிஷ்கன் கலை 4) சாதவாகனர்கலை
5) குடபோகம்

48) வடநாட்டு பக்தி நெறியாளரான ஸ்ரீசைதன்யர் வாழ்ந்த காலம்
1) கி.பி 1469 - 1538 2) கி.பி 1479 - 1531
3) கி.பி 1602 - 1616 4) கி.பி. 1485 - 1534
5) கி.பி 1515 - 1560

49) இந்துக்களின் சமய வாழ்விற்கும் சமய இலட்சியங்களை அடைதற்குமான சாஸ்திரங்களாகக் கருதப்படுபவை
1) விஞ்ஞானம், சோதிடம் 2) வானியல், சோதிடம்
3) கணிதம், வானியல் 4) கணிதம், விஞ்ஞானம்
5) சோதிடம், கணிதம்

50) எண்களை தசம முறைப்படி எழுதும் முறையைக் கூறும் வேதப்பகுதிகள்
1) காடகங்கிதை, பிருஹத் சங்கிதை
2) தைத்திரியசங்கிதை, ஐதரேய சங்கிதை
3) தைத்திரிய சங்கிதை, வாஜசனேய சங்கிதை
4) ஐதரேயசங்கிதை, காடகசங்கிதை
5) காடகசங்கிதை, தைத்திரிய சங்கிதை

**பகுதி Iலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

**1) வேதங்கள் காட்டும் கருத்துக்களை விரிவாக விளக்கம் தர எழுந்தவையே புராணங்கள் ஆகும்.**
1) புராணம் என்பதன் பொருள் யாது?
2) புராணங்கள் கூறும் சமயக்கருத்துக்களை விளக்குக.
3) புராணங்கள் விபரிக்கும் வழிபாட்டம்சங்கள் எவை?

**02) வைணவம் என்பது ஆறு வகை சமயநெறிகளில் ஒன்றாகும். அது இந்து சமய வழிபாட்டிலே மிகுந்த முக்கியத்துவம் பெற்றது.**
1) வைணவ சமயம் தொடர்பான பிரமான நூல்கள் எவை?
2) வைணவ சமயத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக.
3) வைணவ சமய வழிபாட்டு முறை பற்றி விளக்குக.

**03) இலங்கை வரலாற்றுக்குக் காலத்துக்கு முன்பிருந்தே இந்துசமயம் நிலவியது. அது காலத்துக்குக்காலம் வளர்ச்சியடைந்து வந்தது**
1) புராதன இலங்கையில் இந்து சமயம் நிலவியதை ஆதாரம் தந்து விளக்குக.
2) பொலநறுவைக் காலத்தில் இலங்கையில் இந்து சமயம் பெற்றிருந்த சிறப்புக்களை விபரிக்குக.

## பகுதி II

**04) வடஇந்தியாவில் இஸ்லாமியரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட இந்துசமய பக்தி இலக்கியத்தின் சிறப்பம்சங்களை ஆராய்க.**

**05) சைவசித்தாந்தம் பதி பற்றிக்கூறும் கருத்துக்களை தெளிவுபடுத்துக.**

**06) இராமானுஜரது விசிட்டாத்வைதக் கோட்பாட்டை சங்கரரது அத்வைதக் கோட்பாட்டோடு தொடர்புபடுத்தி ஆராய்க.**

**07) பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சமயச் சீர்திருத்த இயக்கங்கள் இந்துக்களிடையே ஏற்படுத்திய செல்வாக்கினை பரிசீலனை செய்க.**

**08) பின்வருவனவற்றில் எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**
1) அதர்வவேதம்
2) சிவாகமம்
3) வீரசைவம்
4) திருக்கோணேஸ்வரம்
5) சைவபரிபாலனசபை
6) இந்து ஓவியம்

# யுத்தத்தை எதிர்கொள்ள எப்போதும் இராணுவம் தயாராக இருக்க வேண்டும்



எந்நேரமும் இராணுவம் போருக்குத் தயாராக இருக்க வேண்டும், முறைகேடுகளைத் தடுக்க இராணுவத் தளபாடங்கள் கொள்முதலை வெளிப்படையாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். அரியானாவின் குர்கான் நகரில் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடந்தது.

அடிக்கல் நாட்டி பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது, இராணுவ தளபாடங்கள் வாங்குவதில் முறைகேடு நடப்பதாக புகார்கள் வருகிறன. இதைத் தடுக்க தளபாடங்கள் வாங்குவதற்காக நடைமுறையில் மாற்றம் செய்ய வேண்டும். வெளிப்படையான முறையில் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள் வாங்க புதிய நடைமுறை வகுக்கப்படுகிறது. இதை அமுல் செய்யும்போது, முறைகேடுகள் நடப்பதைத் தடுக்க முடியும். இராணுவம் எந்த நேரமும் போருக்குத் தயாராக இருக்க வேண்டியது அவசியம். இந்த விடயத்தில் அரசு தீவிர கவனம் செலுத்துகிறது.

இதற்காக நவீன ஆயுதங்கள் வாங்கப்படுகிறன. அதே நேரத்தில் இந்தியாவில் இராணுவ தளபாடங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல்வேறு நாடுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் காரணமாக இந்தியரவின் இராணுவ பலம் கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், இந்திய பெருங்கடலையும் அதன் அருகே உள்ள பகுதிகளையும் பாதுகாக்கும் திறனும், தகுதியும் இந்தியாவுக்கு உருவாகியுள்ளது. தனது கடமையை நிறைவேற்ற இந்தியா தயாராக உள்ளது. இராணுவ த்தாக்குதலைச் சமாளிக்கும் அதே நேரத்தில், இன்டர்நெட் மூலம் நடக்கும் மறைமுக யுத்தத்தை சமாளிக்கவும் இந்தியா தயாராக உள்ளது. இதன் ஒரு பகுதியாக தேசிய சைபர் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாறு மன்மோகன் சிங் கூறினார்.

இந்தியச் செய்திகள்

# 56 ஆயிரம் இந்தியர்கள் சவுதியிலிருந்து திரும்ப விருப்பம்

சவுதி அரேபியாவில் இருந்து 56 ஆயிரத்து 700 இந்தியர்கள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் இந்தியர்கள் உட்பட ஏராளமான வெளிநாட்டினர் பணியாற்றி வருகின்றனர். வேலை வாய்ப்புகளில் 10 சதவீதத்தை சவுதி இளைஞர்களுக்கு ஒதுக்க வேண்டும் என அந்நாட்டு அரசு அண்மையில் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து முறையான ஆவணங்கள் இல்லாமல் சவுதியில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் உடனடியாக வெளியேற வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இந்தியர்கள் வெளியேற அவகாசம் அளிக்க வேண்டும் என இந்தியா தரப்பில் கோரிக்கை விடப்பட்டது. அதை ஏற்று, ஜூன் மாதம் வரை அவகாசம் அளிக்கப்பட்டது. ஆவணங்கள் இல்லாமல் சவுதியில் தங்கியிருக்கும் இந்தியர்கள் தங்களது பெயரை அங்குள்ள இந்திய தூதரகத்தில் பதிவு செய்து கொண்டு நாட்டை விட்டு வெளியேறுவத்தற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, இந்தியர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறுகையில், சவுதி அரேபியாவில் இருந்து வெளியேற 56 ஆயிரத்து 700 இந்தியர்கள் தங்கள் பெயரை பதிவு செய்துள்ளனர். அடுத்த ஒன்றரை மாதத்தில் இவர்கள் அனைவரும் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும் சவுதியில் உள்ள தூதரக அதிகாரிகளுக்கு உதவி செய்வதற்காக இந்தியாவில் இருந்து 10 அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், இந்தியர்கள் நாடு திரும்பும் விடயத்தில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் இருக்க சவுதி இளவரசரை சந்தித்துப் பேச இருப்பதாகவும் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

## ஆந்திராவில் அதிகவெப்பம் 84 பேர் உயிரிழப்பு

ஆந்திராவில் மக்களை வாட்டி வதைக்கும் வெய்யிலுக்கு இது வரையிலும் 84 பேர் பலியாகியுள்ளனர். ஆந்திராவில் எப்போதும் இல்லாத வகையில், இந்தாண்டு வெய்யிலின் கொடுமை அதிகமாக உள்ளது. கடந்த சில நாட்களாக மாநிலத்தின் பல இடங்களில் 110 பாகைக்கும் மேல் வெப்பநிலை பதிவானது. நேற்றுமுன்தினம் குண்டூர் மாவட்டத்தில் ரென்டசின்டலாவில், 117.14(47.3) பாகை வெப்பநிலை பதிவானது, ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் 108 பாகை பதிவானது.

இந்நிலையில் வெய்யிலின் கொடுமையைத் தாங்க முடியாமல், மக்கள் அவதிகளைச் சந்தித்து வருகின்றனர். பெரும்பாலான இடங்களில் மக்கள் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. இதற்கிடையே கடந்த மாதத்தில் இருந்து வெய்யிலுக்கு பலியானோர் எண்ணிக்கை, 84 ஆக உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக கரீம்நகர் மாவட்டத்தில் 43 பேர் பலியாகியுள்ளனர்.

## ஞாயிறு நற்சிந்தனை

### உண்மையை நோக்கிப் பயணித்தல்.

(யோவான் 16 : 12 - 15)

"உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும் போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (யோவான் 16 : 13)

உண்மை செத்துப்போன சமுகத்தினால் இயேசு சாகடிக்கப்பட்டார். பொய்க்குற்றம் சுமத்தப்பட்டார். பிலாத்து முன்னிலையில் இயேசு விசாரிக்கப்பட்ட போது, "நீ அரசனா" என்று கேட்ட கேள்விக்கு இயேசுவின் பதில் "உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன்" என்கின்றார். பிலாத்து "உண்மையா அது என்ன?" என்று கேட்டான்.

உண்மைக்கும் - பொய்மைக்கும், நீதிக்கும், அநீதிக்கும், ஒளிக்கும், இருளுக்கும் வித்தியாசம் தெரியாத ஒரு மயக்க நிலையில் அன்றைய சமுகம் மட்டுமல்ல இன்றைய சமுகமும் இருக்கின்றது.

உண்மையை எடுத்துரைப்பது கடினமான பணியாக காணப்படுகிறது. உயிருக்கு ஆபத்தான ஒன்றாக உள்ளது. உண்மைக்கு மாறான செயல்கள் அரங்கேறும் போது மௌனிகளாய் இருக்கும் அபத்தம் உண்டு.

இயேசு சொல்லுகின்றார் தூய ஆவியார் வரும் போது முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். சீடர்கள் இயேசுவின் மரணத்தைக்கண்டு பயந்தார்கள். தங்களுக்கு இப்படியான மரணம் நிகழும் என்று நடுங்கினார்கள். உண்மையை தட்டிக்கேட்பதிலும், உயிர் மேலானது என்று கருதினார்கள். இதனால் அறையைப் பூட்டி பாதுகாப்பாக இருக்கத் தீர்மானித்தார்கள். இத்தகைய பெலவீனமானவர்கள் மீது தூய ஆவியார் பொழியப்பட்டார். துணிச்சலைப் பெற்றார்கள், பூட்டிய அறையை விட்டு வெளியேறினார்கள். உண்மைக்கு சான்றுபகர்ந்தார்கள். பகிரங்கமாக தவறைச் சுட்டிக் காட்டிக் கண்டித்தார்கள்.

பேதுரு தனது முதலாம் அருளுரையில் "நீங்கள் அறைந்த இயேசுவை கடவுள், ஆண்டவரும் மெசியாவுமாக்கினார்.." என்கின்றார். (தி.பணி 2 : 36) பேதுரு தனது இரண்டாம் அருளுரையில் "வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்று விட்டீர்கள் ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார்..." என்கின்றார். (தி.பணி 3 : 15) தூய ஆவியானவர் உண்மையை எடுத்துரைக்க வழிநடத்தினார். உண்மைக்காக சாட்சிபகர வழிநடத்தினார். எமது சமுகத்தில் புரையோடிப்போன உண்மைக்கு மாறான செயல்களை வெளிப்படையாக காண்டித்து உண்மையை நிலைநாட்ட தூய ஆவியார் எங்களை வழிநடத்தட்டும்.

-வி.பி.தனேந்திரா-



டில்லியில், பாரதிய ஜனதாக்கட்சி மூத்த தலைவர் அத்வானியை, அவுஸ்ரேலிய வெளியுறவு அதிகாரி பேட்ரிக் சங்லிங் சந்தித்துப் பேசினார்.

## வாழ்க வளமுடன்


பெயர்: கி.செரினா
முகவரி: 133/7 கொழும்புத்துறை யாழ்ப்பாணம்.
அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர்: ம.தர்மிகா (சைலி)
முகவரி: இல. 33, விவேகானந்த நகர்.
அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர்: ர.கிறேஸ் ஜஸ்மின்
முகவரி: உடுவில் தெற்கு, சுன்னாகம்.
அகவை 5 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பாகிஸ்தான் பயணித்த விமானம் இங்கிலாந்தில் இடைமறித்து தரை இறக்கம்

(லண்டன்)

தீவிரவாதிகள் அச்சத்தில் பாகிஸ்தானிய விமானம் இங்கிலாந்தில் இடைமறித்துதரை இறக்கம் செய்யப்பட்டுள்ளது பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாண தலைநகரான லாகூரில் இருந்து, பி,கே709 என்ற பாகிஸ்தான் சர்வதேச விமானம், நேற்று முன்தினம் காலை 9.35 மணிக்கு இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகர் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. இங்கிலாந்து நேரப்படி மதியம் 2 மணிக்கு, மான்செஸ்டர் செல்ல வேண்டிய அந்த விமானத்தில் 297 பேர் பயணம் மேற்கொண்டனர்.

மான்செஸ்டர் நகரை நெருங்கிக்கொண்டிருந்த அரை மணி நேரத்திற்கு முன்பாக, அந்த விமானத்தில் தீவிரவாதிகள் இருபதாக வந்த செய்தியை அடுத்து பிரிட்டன் போர் விமானங்கள் பாகிஸ்தான் விமானத்தை இடைமறித்தன. பின்னர் மான்செஸ்டர் விமான நிலையத்தில் இறக்குவதற்கு பதில் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அந்த விமானம் அங்கு தரையிறக்கம் செய்யப்பட்டது. உடனடியாக அங்கு தயாராக இருந்த பொலிஸார் அதிரடியாக பாகிஸ்தான் விமானத்திற்குள் புகுந்து சோதனையிட்டனர்.



பின்னர் சந்தேகத்தின் பேரில் 30 மற்றும் 41 வயது மதிக்கத்தக்க இருவரைக் கைது செய்தனர். பிரிட்டனை சேர்ந்த அவர்கள் இருவரும் குற்றவாளிகளா? என்பது குறித்து தீவிரவிசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தும் அவர்களிடமிருந்து எந்தவித ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. விமானத்தில் அச்சுறுத்தல்கள் இருப்பதாக வந்த தகவலை அடுத்து விமானத்தை ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் விமானத்தை இறக்கியிருப்பதாக விமானி தெரிவித்ததாக பயணிகள் தெரிவித்தனர்.


ஆனால், விமானத்தில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் பத்திரமாக இருப்பதாக பாகிஸ்தானிய விமான நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து வந்த இரு விமானங்கள் இதுபோன்று சோதனைக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.



மியான்மர் சென்றுள்ள ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபேயை, யங்கூன் விமான நிலையத்தில் வரவேற்கும் யாங்கூன் மாகாண முதல்வர் மையின்ட் ஸ்வி.

உலகச் செய்திகள்

# பாலைவனத்தில் சிக்கிய சுற்றுலாப் பயணிகள் காப்பாற்றல்



(அபுதாபி)

அபுதாபியின் மலைப்பிரதேசமான அல்- பாயாவின் பாலைவனப் பகுதியில் சிக்கிக்கொண்ட இரண்டு சுற்றுலாப் பயணிகளை. துபாய் பொலிஸாரின் விமானப்பிரிவு காப்பாற்றியது.

துபாய் காவல்துறையின் ரோந்து ஹெலிகொப்டர், பாலைவனப பிரதேசங்களில் சுற்றி வந்துகொண்டிருந்தபோது, மலைப்பகுதிகள் நிரம்பிய அல்- பாயா பாலைவனப் பகுதியில் சுற்றுலா நிறுவனம் ஒன்றின் வாகனம் மணலில் சிக்கிக்கொண்டிருந்ததை விமானிப் பயிற்சியாளரான மேஜர் அகமது ஹமத் அல் 'ாஹி கண்டுபிடித்தார். உடனடியாக ஹெலிகாப்டரை கீழிறக்கிய அகமது, தனது குழுவினருடன், புதையுண்ட வாகனத்தை வெளியில் எடுக்க உதவி புரிந்தார். பின்னர் நகரின் பிரதான சாலைக்கு வழி காட்டியுள்ளார். அந்தச் சுற்றுலா வாகனத்தில் இருந்த இரு ஆஸ்ரேலியர்களும் அவருக்கு நன்றி கூறினர்.

மிகப்பெரிய வியாபாரக் கேந்திரமாகவும், சுற்றுலாத் தளமாகவும் வளர்ச்சி பெற்றுவரும் ஐக்கிய அரபுக் குடியரசின் வளர்ச்சிக்கும், பொதுமக்களின் அவசரத் தேவைகளுக்கும் உதவி புரியும் வண்ணம் அகமது பணியாற்றி வருகின்றார். இதுபோன்ற பாலைவனப் பகுதிகளில் பயணம் செய்யும்போது, பொதுமக்கள் தாங்கள் பயணம் செய்யும் இடங்களைப் பற்றி விபரங்களை அறிவிக்கக்கூடிய கருவிகளை எடுத்துச் செல்லவேண்டும் என்றும். உதவி தேவைப்பட்டால், பொலிஸாரை அழைக்கவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

# பெண்கள் போகப் பொருள் இல்லை



போரின் போது களைப்படைந்த வீரர்களுக்கு பெண் செக்ஸ் அடிமைகள் தேவை என்று ஜப்பானின் ஒசாகா நகர மேயர் தெரிவித்த கருத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானின் ஒசாகா நகர மேயராக இருப்பவர் டோரு ஹஷிமோடோ, மறு சீரமைப்பு கட்சியைச் சேர்ந்தவர்.

இவர், போரின் போது தென் கொரியாவைச் சேர்ந்த பெண்கள் பலரை செக்ஸ் அடிமைகளாக, ஜப்பான் இராணுவத்தினர் வைத்திருந்த தகவலை பெருமையாக குறிப்பிட்டார்.

இதற்கு தென்கொரியாவைச் சேர்ந்த அப்போதைய செக்ஸ் அடிமைப் பெண்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், தாங்கள் கொடுமைப்படுத்தப்பட்ட விதம் குறித்து கண்டனம் தெரிவித்தனர்.

மேலும் இப்போது, 85 வயதாகும் இரு முன்னாள் செக்ஸ் அடிமை பெண்களை சந்திக்க, மேயர் டோரு ஹஷிமோடோ விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் அந்தப் பெண்கள் மேயரை சந்திக்கப் போவதில்லை என்று அதிரடியாக அறிவித்துள்ளனர்.

பெண்களைப் போகப் பொருளாக கருதும் மேயருடன், நாங்கள் எவ்வித சந்திப்பையும் வைத்துக் கொள்ளப் போவதில்லை எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

# ஜப்பான் பிரதமர் இல்லத்தில் ஆவி நடமாட்டம்



ஆவி நடமாட்டம் காரணமாக ஜப்பான் பிரதமர் தனக்கென ஒதுக்கப்பட்ட குடியிருப்பு பகுதிக்குச் செல்லவில்லை என பரபரப்பாக பேசப்பட்டது.கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜப்பானின் புதிய பிரதமராக ஷின்சோ அபே பொறுப்பேற்றார்.6 மாதங்கள் ஆகியும் அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ள இல்லத்துக்கு அவர் குடிபெயரவில்லை.

பிரதமரின் அரசு இல்லத்தில் ஆவி நடமாடுவதாகவும், அதன் காரணமாக அந்த இல்லத்துக்கு குடிபெயர அபே மறுத்து வருவதாகவும் புரளி நிலவுகிறது.


இது உண்மையா? என எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அமைச்சரவைக்கு கடிதம் எழுதி இருந்தார்.

பிரதமரின் செயல் அலுவலகத்தின் இரண்டாவது வாயிலாக இந்த இல்லம் விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், அந்த இல்லத்துக்கு குடிபெயர காலதாமதம் செய்வதால், அவசர காலத்தில் பிரதமர் விரைவாக செயல்படுவதற்கு தடையாக அமையும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கேள்விக்கு அபே தலைமையிலான அமைச்சரவை நேற்று முன்தினம் எழுத்துப் பூர்வமாக பதில் அனுப்பி உள்ளது.

அதில், அரசு இல்லத்துக்கு பிரதமர் குடிபெயராமல் இருப்பதற்கு ஆவி நடமாட்டம்தான் காரணம் என்று கூறப்படுவது ஏற்க முடியாது என கூறப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தில் சீக்கியர்களுக்கு இலவச பாடசாலை ஆரம்பம்



(லண்டன்)

இங்கிலாந்தின் லீசெஸ்டர் நகரில், சீக்கியர்களுக்கான முதல் இலவசப்பாடசாலை தொடங்கப்படுகிறது. குறிப்பிட்ட அளவில் சீக்கியர்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். ஒன்பது குருத்வாராக்களின் தலைவர்கள் இணைந்து தொடங்க இருக்கும் இந்தப் பாடசாலை செப்டெம்பர் முதல் செயல்பட இருக்கின்றது.

சீக்கியர்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, மீதி இடங்களுக்கு மற்றப் பிரிவினரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தப் பாடசாலைக்கு இங்கிலாந்து அரசு அனுமதி வழங்கி உள்ளது. 50 ஆயிரம் மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதி கிடைக்கும் வகையில் அரசு, இந்த வாரம், 102 இலவசப் பள்ளிகளுக்கு அனுமதி அளித்துள்ளது. இத்தகைய பள்ளிகளுக்கு அரசின் நிதி உதவி கிடைக்கும். நன்கொடையாளர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இணைந்து இத்தகைய பள்ளிகளை உருவாக்குவார்கள்.

இந்த வகையான தனியார் பாடசாலைகள் அரசு பாடத்திட்டத்தை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே, இங்கிலாந்தில் 81 இலவசப் பாடசாலைகள் இயங்கிவருகின்றன. வரும் செப்டெம்பரில், மேலும் 109 இலவசப் பாடசாலைகள் செயற்படத் தொடங்கும் என்று அந்நாட்டின் கல்விச் செயலாளர் மைக்கேல் கோவ் தெரிவித்துள்ளார்.

# புதிய வர்த்தக ஒப்பந்தம் சீனா – சுவிஸ் கையெழுத்து

சீனா-சுவிட்சர்லாந்து இடையே புதிய வர்த்தக ஒப்பந்தம் கையெழுத் திட்டப்பட்டுள்ளது.

சீன பிரதமர் லீ கெகியாங் தனது 3 நாள் இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தான் சென்றார். அங்கிருந்து சுவிட்சர்லாந்துக்கு சென்றுள்ளார்.

அங்கு, சீன பிரதமர் லீ கெகியாங் மற்றும் சுவிட்சர்லாந்து அதிபர் யூலி மவுரெர் இருவரும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். மேற்கத்திய நாடுகளுடன் சீனா இது போன்ற ஒப்பந்தத்தை செய்து கொண்டது இதுவே முதல் முறையாகும்.


இந்த ஒப்பந்தத்தின் மூலம் 26 பில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகம் இரு நாடுகளுக்குமிடையே நடைபெறும் என்று கூறப்படுகிறது. கடிகாரங்கள், மருந்துகள், ஜவுளி, பால் பொருட்கள் போன்றவை இதில் முக்கிய இடம்பெறவுள்ளன.



உலகில் பொருளாதாரத்தில் முன்னிலையில் உள்ள 20 நாடுகளில் சுவிட்சர்லாந்தும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்வழிகாட்டும் செய்திகளை பத்திரிகைகள் வெளியிட வேண்டும்

## - அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள் -



(யாழ்ப்பாணம்)

பத்திரிகைகள் பொய்யையும் இனவாதத்தையும் தூண்டும் வகையில் செய்திகளை வெளியிடாமல் மக்களுக்கு நல்வழி காட்டும் சரியான செய்திகளை வெளிக்கொணர வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற புதிதாக நியமனம் பெறவுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதே சமுர்த்தி திட்டத்தின் நோக்காகுமென்பதை உணர்ந்து கொண்டு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் விசுவாசமாகவும் உண்மையாகவும் உழைக்க வேண்டும்.

செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கிணங்க சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணியாற்றும் வகையில் அவர்களது கடமைகள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

குறிப்பாக தவறான வழிநடத்தல்களுக்கு ஒருபோதும் இடமளிக்காது மக்களுக்கு நன்மை பயக்கின்ற வகையில் பணியாற்ற வேண்டுமென்பதுடன் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்துவதன் ஊடாக எமது மக்கள் மென்மேலும் அபிவிருத்தியில் மேம்பாடு அடைய முடியும்.

இதனிடையே பத்திரிகைகள் இனவாதத்தை தூண்டும் வகையிலும் பொய்யான தகவல்களை வெளியிடும் வகையிலும் செய்திகளை வெளியிட்டு மக்களை குழப்பி வருகின்றன.

இவ்வாறான சுயலாப அரசியல்வாதிகளின் செயல்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டு மெனவும் இப்பேற்பட்ட தவறான வழிநடத்தல்களினாலேயே எமது மக்கள் சொல்லொணா துன்ப துயரங்களை அனுபவிக்க வேணடிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில், கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எமது மக்கள் சரியாகப் பயன்படுத்தும் பட்சத்தில் மூன்று முதல் ஐந்து வருடங்களுக்குள் யாழ்ப்பாண மாவட்டத்தை மட்டுமல்லாது வடமாகாணம் முழுமையையும் வளமான செல்வம் கொழிக்கின்ற பூமியாக மாற்றியமைக்கமுடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே வேலைவாய்ப்பாக மட்டும் கருதாது உங்களையும், நீங்கள் சார்ந்து வாழும் சமூகத்தையும் மேம்பாடு அடைய வைக்கும் வகையிலும், சமூகத்தில் நடைபெறுகின்ற சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்தும் வகையிலும் சமூகத்திற்கு நல்வழிகாட்டிகளாகவும் திகழ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

யாழ். மாவட்டத்தில் 258 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 1 ஆம் திகதி சமுர்த்தி உத்தியோகத்தர்களாக புதிதாக நியமனம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### புலம்பெயர்ந்த...

அவர்களைத் தாக்கினர். இவ்வாறாக பாதுகாப்பாக மீட்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றம் செய்துள்ளோம். அதுமட்டுமல்லாது, தற்போதும் இந்த மக்களின் அபிவிருத்திக்கு இராணுவத்தினர் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

அத்துடன், 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை சமூகத்துடன் இணைத்துள்ளோம். அவர்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இப்படியாக சமூகநல நோக்குடன் செயற்பட்ட செயற்படுகின்ற இராணுவமா போர்க்குற்றம் புரிந்தது? போர்க்குற்றம் புரிந்திருந்தால் 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களை எப்படி இராணுவம் சமூகமயப்படுத்தும்?

எம்மீது பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் சர்வதேசத்தினர் இவற்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### திருமலையில்...

தூதரகங்கள் முதலில் வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் உள்நாட்டு நடைமுறை.

ஆனால் வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்படாமலேயே திருகோணமலை நகரசபையுடன் அமெரிக்க தகவல் நிலையத்தை அமைக்கும் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உடன்பாடு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கவுள்ளேன்.

அத்துடன், அமெரிக்கத் தகவல் நிலையத்தை அமைப்பது தொடர்பான விபரங்களை வெளிவிவகார அமைச்சுக்குத் தரத் தவறியது ஏன் என்று அமெரிக்க அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே திருகோணமலை நகரசபைத் தலைவர் செல்வராசாவுடன், இந்த உடன்பாட்டை செய்து கொண்ட அமெரிக்கத் தூதரக பேச்சாளரும், ஊடக, கலாசார, கல்வி விவகாரங்களுக்கான பணிப்பாளருமான கிறிஸ்ரொபர் டீல், தாம் எந்த நடைமுறைகளையும் மீறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே அமெரிக்கத் தூதரகம் கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் இதுபோன்ற தகவல் நிலையங்களை அமைத்துள்ளது. அதற்கு வெளிவிவகார அமைச்சின் அனுமதி ஏதும் பெறப்படவில்லை.

திருகோணமலையில் அமெரிக்க தகவல் நிலையத்தை அமைக்கும் விவகாரத்திலும் அதே நடைமுறையே பின்பற்றப்பட்டுள்ளது.

இது பொதுமக்களின் நலனுக்காக, குறிப்பாக மாணவர்களின் நலனுக்காகவே அமைக்கப்படுகிறது. விரைவில் இதுபோன்ற நிலையம் தெற்கிலும் நிறுவப்படும் என்று தெரிவித்துள்ளார்.

### மன்னார்...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது அமைப்பிற்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளனர். இன சமூகங்களுக்கு இடையிலான பிணைப்பினை சீர்குலைக்க பொதுபல சேனா முயற்சி செய்யக் கூடாது என மன்னார் ஆயர் அண்மையில் பகிரங்க கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரபல...

விஜயம் என்னும் படத்தில் "ராதே என்னை விட்டுப் போகாதடி" என்னும் பாடலுடன் இவர் அறிமுகமானார்.

தமிழ் தவிர தெலுங்கு மலையாளம் ஆகிய மொழிகளிலுமாக 10,000 பாடல்களுக்கும் அதிகமாக அவர் பாடியிருக்கிறார்.


### தீக்குளித்த...

தமக்கு எதுவும் தெரியாது என கட்சியின் தலைவர் அதுரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் பற்றிய தகவல் தெரிந்திருந்தால் நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கும்.

மாடுகள் கொலை செய்யப்படுவதனைத் தடுக்கும் நோக்கில் நாடாளுமன்றில் ஏற்கனவே சட்டப் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வற்றாப்பளையில் ஜோதிலிங்க தரிசனம்



(முல்லைத்தீவு)

பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தினால் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள 12 ஜோதிலிங்கம் மக்களின் தரிசனத்திற்காக நேற்றுக் காலை 8.00 மணிக்கு வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்தில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இதில் இந்தியாவில் உள்ள சிவ திருத்தலங்களில் அமைந்துள்ள விஷ்வநாத், திரியம்பகேஸ்வரர், வைத்யநாத், நாகேஸ்வரர், ராமேஸ்வரர், கிருஷ்ணேஷ்வர், பீமாசங்கர், கேதார்நாத், ஓங்காரேஸ்வரர், மகாகாளேஸ்வர், மல்கார்ஜீன், சோமநாத் ஆகிய ஜோதிலிங்கங்களை சித்தரிக்கும் வகையில் அடியார்கள் பார்வையிடும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (40)

# இராணுவத்தின் பிரதான கடமை தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை

## தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் பிரதான பொறுப்பும் கடமையுமான தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி லெப டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

போர் முடிவடைந்துள்ள போதிலும், வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் தேசிய பாதுகாப்புக்காக இராணுவம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளில் எந்தக் குறைவும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ள அவர், எந்த நாட்டின் இராணுவத்தினரதும் பிரதான பொறுப்பு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும் எனவும் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத்திற்கு போதுமான ஆளணி இருப்பதால், பாதுகாப்புக் கடமைகளை தவிர, நாட்டின் தேசிய அபிவிருத்தியிலும் இராணுவத்தினர் பங்களிப்பை வழங்க முடிந்துள்ளது.

நிர்மாணப் பணிகள், விவசாயம், சுற்றுலா போன்ற அபிவிருத்திப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டாலும் இதனால் நாட்டின் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்ல எந்தத் தடையுமில்லை எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகளுக்கு பொது மன்னிப்பு கோரிக்கை நிராகரிப்பு

## என்கிறது திவயின

(கொழும்பு)

கைதுசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) விடுத்துள்ள கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது என திவயின தெரிவித்துள்ளது.

விமானங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியவர்கள், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், கிராமங்களுக்குள் புகுந்து கொலைகளைச் செய்தவர்கள் என பல வன்முறைச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட சுமார் 200 விடுதலைப்புலிகள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறிய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு மாத்திரம் மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக திவயின மேலும் தெரிவித்துள்ளது.

### ஐ.நா. மனித...

பிரேரணைகளும் முன்வைக்கப்படவுள்ளன.

47 உறுப்பு நாடுகள் இந்தக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளவுள்ளதுடன் மேலும் பலநாடுகளும் அவதானிப்பு நாடுகளாகவும் கலந்துகொள்ளவுள்ளன.

இந்தக் கூட்டத்தொடருக்கு இலங்கையின் சார்பில் அமைச்சர்கள் மட்டத்திலோ அதிகாரிகள் மட்டத்திலோ எந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்ளமாட்டார்கள் என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து மட்டும் உயர் அதிகாரி கலந்துகொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஜெனிவாவில் உள்ள இலங்கை வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான தூதரக அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை சார்பாக கலந்துகொள்ளவுள்ளனர்.

# அதிபர்களுடன் மட்டும் இயங்கும் துணுக்காய் வலய பாடசாலைகள்

## பெற்றோர் கடும் விசனம்

(நெடுங்கேணி)

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 10 பாடசாலைகளில் ஆசிரியர்கள் எவருமின்றி அதிபர்கள் மட்டும் கடமையாற்றும் அவல நிலை காணப்படுவதால் தமது பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பு ஏற்படும் என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஆரம்பக் கல்வி பாடசாலைகளான மு/புதுவெட்டுவான் குளம் அ.த.க. பாடசாலை, மு/அம்பலப்பெருமாள் அ.த.க. பாடசாலை, மு/ஆலங்குளம் அ.த.க. பாடசாலை, மு/புலுமெச்சிநாதர் குளம் அ.த.க. பாடசாலை, அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை, பெரியகுளம் அ.த.க. பாடசாலை, மூன்றுமுறிப்பு அ.த.க. பாடசாலை, உயிலங்குளம் அ.த.க. பாடசாலை, பெரியஈச்சமடு அ.த.க. பாடசாலை போன்ற 10 பாடசாலைகளுமே ஆசிரியர்களின்றி அதிபருடன் இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகளுக்கு 4 ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதும் அதிபருடன் மட்டும் பாடசாலை இயங்குவதால் மாணவர்கள் பூரணமான கல்வியைப் பெறமுடியாதுள்ளதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட அதிபர்களுக்கான கூட்டங்கள், கருத்தரங்குகள் நடைபெறும்போது பாடசாலைகள் மூடவேண்டிய சூழ்நிலையிலும், அதிபரில் மட்டுமே மாணவர்களின் கல்வி தங்கியிருக்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதனைவிட அதிபருக்கு வேலைப்பளுக்கள் அதிகரிப்பதால் ஆசிரிய சேவையையும் பூரணமாக நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கிணங்க எமது சிறு பிள்ளைகளின் கல்வியைப் பூரணமாக வழங்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

# பொதுநலவாய வியாபாரமன்றின் ஒழுங்குகளை மேற்கொள்ள சந்திப்பு



பொதுநலவாய அரசாங்க தலைவர்களின் கூட்டத்தின், பக்கத் துணையாக எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும், வியாபார மன்றின் ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான, கலந்துரையாடல்கள் தொடர்பாக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்ஸை பொதுநலவாய வியாபார மன்றின் பணிப்பாளர் நாயகம் பீட்டர் கௌகென் சந்தித்தார்.

வியாபார மன்றின் பிரதிபலனாக, உள்வரும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு, வெளிவிவகார அமைச்சுடன், லண்டனில் உள்ள பொதுநலவாய வியாபார மன்றானது சுறுசுறுப்பாக இணைந்து செயலாற்றுகின்றது.

இலங்கையுடன் குறிப்பிடத்தக்க வர்த்தகத் தொடர்புகளை பேணிவரும், பொதுநலவாயத்தில் உள்ள நாடுகள், மற்றும் வேறு பல நாடுகளில் உள்ள பெரும்பான்மையான தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வியாபார, வணிக சம்மேளனங்கள் கொழும்பில் நடைபெறவிருக்கும் வியாபார மன்றில், பங்குகொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே பல முன்னணி வியாபார முக்கியஸ்தர்கள், தாங்கள் பங்குகொள்வதை உறுதிசெய்துள்ளார்கள்.

பொது மற்றும் தனியார் துறைகளில் இருந்து பங்குகொள்வோர் இடையே, ஆர்வத்தினை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள், இறுதி நிறைவேற்றம் பெற இருக்கின்றது.

அமைச்சர் பீரிஸிடனான அவரது சந்திப்பின் பின்னராக இந்த ஒழுங்குகளில் ஈடுபட்டுள்ள இலங்கையில் உள்ள வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளுடன் பீட்டர் கௌகென் ஒரு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

# இலங்கைப் பணியாளர்களுக்கு குவைத் பொது மன்னிப்பு

சட்டவிரோதமான முறையில் தமது நாட்டில் தங்கியிருப்போருக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து குவைத் அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும், இதில் இலங்கையர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனை எதுவுமின்றி நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல அனுமதியளிப்பது குறித்து குவைத் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரிய விசா அனுமதிப்பத்திரமின்றி தங்கியிருந்தவர்களுக்கு இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தியா, நேபாளம், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் குவைத்தில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும், பொது மன்னிப்புக் காலம் தொடர்பில் இதுவரையில் எதுவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

# ஆயுர்வேத சிகிச்சை நிலைய பதிவு நடவடிக்கைகள் நிறுத்தம்

(கொழும்பு)

ஆயுர்வேத சிகிச்சை அளிப்பதாகக் கூறி சட்டவிரோதமாக இயங்கிவரும் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் அவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானித்துள்ளதாக ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் பாலித வீரகோன் தெரிவித்துள்ளார்.

இதுவரை தம்மிடம் 167 ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள் தங்களை பதிவு செய்துகொண்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

இருப்பினும் இன்னும் பதிவை மேற்கொள்ளாத பல நிலையங்கள் நாடுபூராகவும் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சுற்றுலா சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ள நிலையங்கள் தங்களை பதிவு செய்துகொள்ள முடியும் என பாலித வீரகோன் தெரிவித்துள்ளார்.

# உலக சாதனை படைத்துள்ளது இலங்கையில் தற்கொலை

## - என்கிறது ஐ.தே.கட்சி

தற்கொலைகளில் இலங்கை உலக சாதனை படைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தற்கொலைகள் மற்றும் மதுபான நுகர்வில் இலங்கை உலக அரங்கில் முன்னணி வகிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

போதைக்கு முற்றுப் புள்ளி என அரசாங்கம் பிரசாரம் செய்தாலும், உண்மையில் நிலைமை தலைகீழாகவே காணப்படுகின்றது. கண்டியில் பௌத்த பிக்கு ஒருவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ள மேற்கொண்ட முயற்சி பாரதூரமானது.

இதற்கு யார் உந்து சக்தியாக அமைந்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். உடலுக்கு தீ மூட்டிக் கொண்டமையின் பின்னணியில் ஏதேனும் அரசியல் சக்திகள் செயற்பட்டனவா என்பது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும்.

வாழ்க்கைச் செலவு, பாடசாலை பிரச்சினை, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எவரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# ஜோர்தானில் இலங்கைப் பணிப்பெண் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை?

(கொழும்பு)

ஜோர்தானில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அவரது பெற்றோர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் கறுவாக்கேணியைச் சேர்ந்த நாகேந்திரன் காந்திமதி (வயது - 21) என்ற பெண் ஜோர்தானில் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக கடந்த மாதம் 19 ஆம் திகதி அவரது குடும்பத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 6 ஆம் திகதி உயிரிழந்ததாகக் கூறப்படும் குறித்த பெண்ணின் மரணம் தொடர்பில் தமக்கு இரண்டு வாரங்களுக்குப் பின்னரே அறிவிக்கப்பட்டதாக அவரது குடும்பத்தினர் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி இவர் வீட்டுப் பணிப்பெண்ணாக ஜோர்தான் சென்றுள்ளார்.

அவரது தாயாரும் அந்நாட்டில் வேறொரு வீட்டில் பணிப் பெண்ணாக தொழில் புரிந்துவிட்டு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார். எனினும் நாகேந்திரன் காந்திமதி ஜோர்தானில் தொடர்ந்தும் பணிப் பெண்ணாக தொழில் புரிந்து வந்துள்ளார்.

தனது மகளின் மரணம் தொடர்பாக ஜோர்தானிலுள்ள இலங்கை தூதுவராலயம் கடந்த 19 ஆம் திகதி அறிவித்திருந்த நிலையில், நேற்று சடலம் நாட்டை வந்தடைந்துள்ளதாக அவரது தாயார் தமிழோசையிடம் தெரிவித்தார்.

தனது மகள் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்வதற்கு காரணம் எதுவும் இருக்கவில்லை என்றும் அவருக்கு துப்பாக்கியை இயக்கத் தெரியாது என்றும் வீட்டுக்காரர்கள் மீதே சந்தேகம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீட்டு எஜமானும் அவரது மகனும் தன்னைக் கொடுமைப் படுத்துவது பற்றி தனது மகள் ஏற்கனவே தன்னிடம் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் நாடு திரும்புவதற்கு முந்தைய நாள் வீட்டு எஜமானுடன் தன்னைச் சந்தித்த மகள்,



இந்த ஆண்டு ஜூலை மாதம் மூன்றாண்டு ஒப்பந்தம் முடிவடைகின்றபோது நாடு திரும்பவுள்ளதாக தன்னிடம் கூறியதாகவும் உயிரிழந்த பெண்ணின் தாய் தெரிவித்தார்.

தனது மகள் மர்மமான முறையில் உயிரிழந்திருப்பது பற்றி தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடமும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் உயிரிழந்த பெண்ணின் தாயான 45 வயதான நாகேந்திரன் மங்களேஸ்வரி மேலும் தெரிவித்தார்.

# மூவாயிரம் கிலோ இரும்பு கோப்பாயில் திருட்டு

யாழ்ப்பாணம், கோண்டாவில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 3000 கிலோகிராம் இரும்புகள் திருடப்பட்டுள்ளதாக சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

களவாடப்பட்ட இரும்புகளில் 1800 கிலோகிராம் இரும்புகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பொலிஸார். மீட்கப்பட்ட இரும்புகளில் பாரிய ஆயுதங்களின் உதிரிப்பாகங்களும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இந்த ஆயுதங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (25)

# கால்நடைகள் வெட்டுவதை தடுக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

கால்நடைகளை வெட்டுவது இலங்கையில் தடை செய்யப்பட வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மிருக வதைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பௌத்த பிக்கு ஒருவர் தீக்குளித்தமையை அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்குப் பின்னராவது ஜனாதிபதி, கால்நடைகளை வெட்டுவதனை தடை செய்யவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கால்நடைகளைக் கொல்வது இந்நாட்டில் வாழும் பௌத்த மற்றும் இந்து மக்களிற்கு பாவமான விடயம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.